# இயேசுவின் இரத்தம்



P.C. பிலேமோன் ராஜா
ஆசிரியர் – கிருபையுள்ள வார்த்தை

பிரியமானவர்களே!

உங்கள் யாவரையும் ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே வாழ்த்தி, கிருபையுள்ள வார்த்தையின் மூலமாக சந்திப்பதிலே ஆண்டவருக்குள் அகமகிழ்கிறேன். இந்த மாதம் நாம் இயேசுவின் விலையேறப்பெற்ற இரத்தத்தை (I **பேதுரு 1:18,19**) குறித்து தியானிப்பதற்கு நமது கவனத்தை செலுத்துவோம்.

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தம் மாத்திரமே நமக்கு பாவமன்னிப்பாகிய மீட்பை கொடுக்க கூடியது **(எபே 1 :7)**. நீதியுள்ள தேவன், மனிதனின் பாவ விடுதலைக்காக தனது குமாரனின் இரத்தத்தை வழிமுறையாக தேர்ந்துக் கொண்டார். இயேசு கிறிஸ்துவே நமக்காக அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டி **(வெளி 13:8)**. ''சிலுவை'', நமது பாவங்கள் தேவகுமாரனை எவ்வளவு வேதனைப்படுத்தியது என காணும் இடமாக உள்ளது

## I. பாவத்தின் பெருங்கொடுமை

தேவன் மோசயின் மூலம் கொடுத்த பிரமாணத்தில் உள்ள பலிமுறைமை பற்றி லேவியராகமத்தில் கூறியுள்ளார். இந்த புத்தகத்தில் ஆசாரியர்கள், செய்ய வேண்டிய பலிகள் மற்றும் இரத்தம் பற்றி கூறுகிறார்.

தேவன் **பாவத்தின் மிக கொடுமையான** தன்மை பற்றி பேசுகிறார் **(ரோமர் 7:13)**. பாவம் என்பது தேவனுக்கு முரண்படுகிறது; தேவனை எதிர்த்து நிற்கிறது; அது கண்டுக்கொள்ளாமல் விடப்படக்கூடாததாயிருக்கிறது; மனம் வருந்தாத ஒவ்வொரு பாவியும் தண்டிக்கபடுவர்; தேவனுடைய நீதி பாவத்தை தடைசெய்கிறது; மேலும் பாவம் மரணத்தை கொடுக்கிறது (I **கொரி 15:56**).

**எபி 9:22ன்** படி, பழைய ஏற்பாட்டின் பாவமன்னிப்பிற்கு மிருக இரத்தம் கொடுக்கப்பட்டது. ஆனால், பழைய ஏற்பாடு இயேசுவிடம் வழிநடத்தி வந்த வழித்துணையாளரே **(கலா 3:24,25);** மேலும், நமது பாவத்திற்கான முழுமையான பலியாக இயேசுவே இருக்கிறார் **(கலா 3:22-29; ரோம 15:4;** I **கொரி 10:11)**.

**எபி 10:4ன்** படி, பழைய ஏற்பாடு பலிமுறையின்படி மிருக இரத்தம் பாவத்தை எடுத்துப்போட இயலாததாக இருந்தது. மேலும், பத்து கட்டளைகளையும் முழுமையாக மனிதன் கடைபிடிக்க முடியாதவனாக

இருந்தான் **(அப்15:8-11)**. மனிதன் தனக்காக செய்துக்கொள்ள இயலாததை தேவனே மனிதனுக்காக செய்தார். வேதாகமத்தில் 460 முறை இரத்தம் பற்றி கூறப்பட்டுள்ளது. பைபிளை மிக கவனமாக படிக்கின்ற யாருமே, இயேசு என்னுடைய பாவ விடுதலைக்காக மீட்புக்காக தன்னுடைய இரத்தத்தை சிந்தினார் என்பதை மறுக்கவோ, மறக்கவோ முடியாது. கடவுளையே காவு கொண்ட பெருங்கொடுமையானது 'பாவம்' என்பதை நாம் யாவரும் உணர வேண்டியது அவசியம்.

### II குற்றமற்ற இயேசுவின் இரத்தம்

1. நம்மை தேவனுடன் ஒப்புரவாக்குகிறது **(2கொரி 5:14-21)**
2. நம்மை பாவங்களற கழுவுகிறது **(வெளி 1:5; 7:14)**
3. நம்மை மீட்கிறது **(எபே 1:7, I பேதுரு 1:18,19)**
4. நம்மை சுத்திகரிக்கிறது ( I **யோவா 1:7** )
5. நம்மை நீதிமான்களாக்குகிறது **(ரோ 5:8,19)**
6. நம்மை பரிசுத்தப்படுத்துகிறது **(எபி 10:10; 13:12)**
7. நமது பாவங்களை நிவர்த்தி செய்கிறது. (I **யோ 2:2** )
8. நமக்கு சமாதானம் தருகிறது. **(எபே 2:13-16, கொலே 1:20)**
9. நாம் சாத்தானை வெற்றிகொள்ள கூடியவர்களாக்குகிறது. **(வெளி 12:11).**

இயேசு கிறிஸ்துவின் இரத்தம் மாத்திரமே நமது பாவங்களுக்கான உண்மையான, வரலாற்றுப்பூர்வமான, முழுமையான மற்றும் கடைசியான விலை செலுத்துதலாக உள்ளது. **யோவா 1:29,36** "இதோ உலகத்தின் பாவத்தை சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுகுட்டி."

### III அவருடைய இரத்தத்தின் வல்லமை

1. கிறிஸ்துவினுடைய இரத்தத்திற்கு புதிய உடன்படிக்கையில் அதன் வல்லமையை காண்கிறோம். (மத் 26: 26-28 ; I கொரி11:25,26; எபி 13:20) பைபிளை படிக்கையில் இயேசுவின் இரத்தத்தையும், அவரையும் காணத்தவறும்போது நீங்கள் பைபிளை தவறாக வாசிக்கிறீர்கள் என்று அர்த்தம் (ஆதி 4:2-12; மத் 23:35, லூக்கா 11:50,51). ஆபேலின் இரத்தம் பேசியதைக் காட்டிலும் மேன்மையானதை இயேசுவின் இரத்தம் பேசுகிறது (எபி 12:24; 9:11-22)
2. புதிய ஏற்பாட்டு சபையை உருவாக்குவதில் அவரது இரத்தத்தின் வல்லமையை காண்கிறோம். (அப் 20:28; எபே

5:25-28) மோசேயின் பிரமாணத்தின்படி பல இலட்சம் மிருகங்கள், பறவைகள் பலி செலுத்தப்பட்டன. மிருக இரத்தம் மனித பாவத்தை ஒரு ஆண்டுக்கு முந்திய நிலையில் உருட்டி விடதான் முடிந்தது. ஆனால், இயேசுவின் இரத்தம், "சபை" என்ற மகிமையுள்ள ஒரு காரியத்தை வாங்கியுள்ளது.

இரத்தத்தில் உயிர் இருப்பதாக பைபிள் (லேவி 17:11,14) கூறுகிறது. நமது பாவங்களிலிருந்து நம்மை விடுவிக்க இயேசு தமது இரத்தத்தை கொடுத்தார், (வெளி 1:5). நாம் நித்தியமாக வாழ்வதற்கு அவர் பூமியின் மீது நமக்காக மரித்தார் (I தெச 5:10). சில பொருட்களின் விலையானது அதன் மதிப்பில் வளர்கிறது. அப் 20:28ன்படி கிறிஸ்து அவருடைய இரத்தத்தினாலே தனது ஒரே சபையை வாங்கினார் என்பது "சபை" எவ்வளவு மதிப்புள்ளது என்பதை நாம் அறிய முடிகிறது. சபையை குறைத்து மதிப்பிடுவது, இயேசுவின் இரத்தத்தை மகிமை குலைப்பதாக உள்ளது.

3. புதிய ஏற்பாட்டில் இராபோஜனத்தில், நாம் அவருடைய இரத்ததின் வல்லமையை காண்கிறோம். (அப் 2:42; I கொரி 10:16-21; 11:24-30) ஒரே வழி; ஒரே சரீரம்(சபை), ஒரே அப்பம், ஒரே இரத்தம், ஒரே இராபோஜனம், ஒரே ஜீவன்.

இயேசுவின் இரத்தம், சிலுவை தந்த கனி; இதற்கு எல்லையற்ற வல்லமை உண்டு. இயேசுவின் திருவிருந்து (கர்த்தரின் பந்தி) அவர் மீண்டும் வரும் வரை, அவருடைய மரணத்தைச் சொல்லிக் கொண்டே இருக்கிறது. **(I கொரி11:26)**

4. பிரதான கட்டளைபடி திருமுழுக்கிலே கிறிஸ்துவின் இரத்தத்தின் வல்லமையை காண்கிறோம். (மத் 28:18-20; ரோ 6:1-5; கலா 3:26,27; கொலே 2;12); இரத்தமின்றி, பைபிள் இன்றி, சபை இல்லாமல், திருவிருந்து இல்லாமல், திருமுழுக்கு இல்லாமல் உலகம் இரட்சிப்பை விரும்புகிறது. ஆனால், சிலுவையின் வழியில்லாமல் வேறு கதியே இல்லை.

இந்த மேன்மையான, வல்லமையான விலையேறப் பெற்ற இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தினால் நீங்கள் உங்கள் பாவங்கள் போக கழுவப்படாமல் இருப்பது எவ்வளவு பரிதாபத்திற்குரியது **( I தெச 5:19; I கொரி15:19).** இன்றே இரட்சணிய நாள் உடனே கீழ்படிவோம், (அப்22:16). இந்த மேன்மையான காரியத்தில் உங்களுக்கு உதவ நாங்கள் எப்பொழுதும் ஆயத்தமாயிருக்கிறோம்.

அன்புடன்

**உங்கள் சகோதரன்**, **PCPR**

# இரட்சிப்பவைகள்


J.C. Choate

தன்னுடைய பழைய பாவங்களிலிருந்து தன்னை மன்னிக்கும் பொருள் என்று, எந்த ஒரு நபரும் ஒரே ஒரு காரணியை சுட்டிக்காட்ட முடியாது. சிலர் அப்படி செய்ய முற்பட்டு, தங்கள் கொள்கைகளை வேத வணத்திற்கு பதிலாக மாற்றி தங்களையே முட்டாளாக்குகின்றனர்.

ஒன்றோடு ஒன்று சம்பந்தபபட்ட சிலவற்றின் மூலம் நாம் இரட்சிக்கப்படுகிறோம் வேதாகமம் என்று கூறுகிறது. இதை மனதில் கொண்டு கிழே உள்ளவற்றை தியானிப்போம்.

**1. விசுவாசம் இரட்சிக்கிறது :**

பவுலும் சீலாவும் சிறைச்சாலை அதிகாரியுடன் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசி, அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள் (அப் 16:31) என்றனர். விசுவாசம் மட்டும் நம்மை இரட்சிக்கும் என்று அவர்கள் கூறவில்லை.

**2. மனந்திரும்புதல் இரட்சிக்கிறது :**

தேவனுக்கேற்ற துக்கம் பின்பு இரட்சிப்புகேதுவான மனந்திரும்புதலை உண்டாக்குகிறது (2 கொரி 7:1). நீங்கள் மனந்திரும்பவில்லை என்றால் அப்படியே அழிந்து போவீர்கள் என்று கர்த்தர் தாமே கூறினார்.

**3. அறிக்கை இரட்சிக்கிறது :**

நீதியுண்டாக இருதயத்திலே விசுவாசிக்கப்படும் இரட்சிப்புண்டாக வாயினாலே அறிக்கை பண்ணப்படும் (ரோ 10:10) நாம் அவரை மனுஷருக்கு முன்பாக அறிக்கை செய்தால், அவர் நம்மை பிதாவிற்கு முன்பாக அறிக்கை செய்வேன் என்று கர்த்தர் வாக்குத்தத்தம் செய்திருக்கிறார்.

**4. ஞானஸ்நானம் இரட்சிக்கிறது :**

அதற்கு ஒப்பனையான ஞானஸ்நானமானது மாம்ச அழுக்கை நீக்குதலாயிராமல், தேவனைப் பற்றும் நல் மனச்சாட்சியின் உடன்படிக்கையாயிருந்து இப்பொழுது நம்மையும் இயேசு கிறிஸ்துவினுடைய உயிர்த்தெழுதலினால் இரட்சிக்கிறது. (1 பேதுரு 3:21). சிலர் ஞானஸ்நானத்தை ஏற்றுக்கொள்வதில்லை; ஆனால் இரட்சிக்கப்பட ஒருவன் ஞானஸ்நானம் பெற வேண்டும் என்று வேதாகமம் கூறுகிறது.

**5. இரத்தம் இரட்சிக்கிறது :**

உங்கள் முன்னோர்களால் பாரம்பரியமாய் நீங்கள் அநுசரித்து வந்த வீணான நடத்தையினின்று அழிவுள்ள வஸ்துக்களாகிய வெள்ளியினாலும் பொன்னினாலும் மீட்கப்படாமல், குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினாலே மீட்கப்பட்டீர்களென்று அறிந்திருக்கிறீர்களே. (1பேது 1:18,19)

**6. கிருபை இரட்சிக்கிறது :**

கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு. ஒருவரும் பெருமை பாராட்டாதபடிக்கு இது கிரியைகளினால் உண்டானதல்ல (எபே 2:8,9). கிருபையினால் விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டோம் என்பதை கவனிக்கவும்.

லூக்கா 2 : 36,37



... அன்னாள் என்னும்
ஒரு தீர்க்கத்தரசி...
ஏறக்குறைய எண்பத்து நாலு
வயதுள்ள அந்த விதவை
தேவாலயத்தை விட்டு நீங்காமல்
இரவும் பகலும் உபவாசித்து ஜெபம்
பண்ணி ஆராதனை செய்து
கொண்டிருந்தாள்

**7. இரக்கம் இரட்சிக்கிறது :**

நாம் செய்த நீதியின் கிரியைகளினிமித்தம் அவர் நம்மை இரட்சியாமல், தமது இரக்கத்தின்படியே மறுஜென்ம முழுக்கினாலும் பரிசுத்த ஆவியினுடைய புதிதாக்குதலினாலும் நம்மை இரட்சித்தார் (தீத்து 3:5)

**8. கிரியை இரட்சிக்கிறது :**

அதிக பயத்தோடும் நடுக்கத்தோடும் உங்கள் இரட்சிப்பு நிறைவேறப் பிரயாசப்படுங்கள் (பிலி 2:12). தேவனுடைய கட்டளைகளுக்கு கீழ்படிவதே, இரட்சிப்பு நிறைவேற பிரயாசப்படுவதாகும்.

**9. அன்பு இரட்சிக்கிறது :**

நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருந்தால் என் கற்பனைகளைக் கைக்கொள்ளுங்கள் (யோ 14:15). அவரை நேசிப்பது என்பது அவருக்கு கீழ்படிவதாகும்.

**10. நம்பிக்கை இரட்சிக்கிறது :**

அவர் மேல் இப்படிபட்ட நம்பிக்கை வைத்திருக்கிறவனெவனும் அவர் சுத்தமுள்ளவராயிருக்கிறது போல தன்னையும் சுத்திகரித்துக் கொள்கிறான்

(1யோ3:3). நம்பிக்கை இல்லை என்றால், மனிதன் அநேக காலங்களுக்கு முன்பே தளர்ந்து போயிருப்பான்.

**11. சத்தியம் இரட்சிக்கிறது :**

சத்தியத்தையும் அறிவீர்கள் சத்தியம் உங்களை விடுதலையாக்கும் என்றார், (யோ8:32). தேவனுடைய வார்த்தையே சத்தியம்.

**12. கிறிஸ்து இரட்சிக்கிறார் :**

பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார் என்கிற வார்த்தை உண்மையும் எல்லா அங்கீகரிப்புக்கும் பாத்திரமுமானது. அவர்களில் பிரதான பாவி நான் (1 தீமோ 1:15)

**13. தேவன் இரட்சிக்கிறார் :**

நம்முடைய இரட்சகராகிய தேவனுக்கு முன்பாக, அது நன்மையும் பிரியமுமாயிருக்கிறது. எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும் சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும், அவர் சித்தமுள்ளவராயிருக்கிறார் (1 தீமோ 2:34)

ஏதாவது ஒன்று மட்டும் நம் இரட்சிப்பிற்கு போதுமானது என்று வேதாகமம் கூறவில்லை. ஆத்துமா இரட்சிக்கப்படுவதற்கு சம்பந்தப்பட்ட அநேக காரியங்களை (வேதாகமத்தில்) பட்டியல் இருக்கிறது. சத்தியத்தின் ஒரு பகுதியை மட்டும் ஏற்றுக் கொண்டு இரட்சிக்கப்பட முடியாது. பாவ மன்னிப்பு பெற்றுக் கொள்ள சத்தியத்தை அறிகிற அறிவு வேண்டும்; தேவனுடைய சித்தத்தை விசுவாசிக்க வேண்டும்; இறுதியாக தேவனுடைய சட்டத்திற்கு கீழ்படிய வேண்டும். அப்பொழுது அவன் நீதிமானாக எண்ணப்படுவான்.


**படிவம் IV**

| | |
|---|---|
| 1. வெளியாகும் இடம் : | மதுரை |
| 2. வெளியாகும் காலம் : | மாதம்தோறும் |
| 3. பதிப்பாளர் பெயர் : | பிலேமோன் ராஜா |
| எந்த நாட்டவர் : | இந்தியர் |
| முகவரி : | 45 C/1, சர்ச் சந்து, காரனேசன் தெரு, அரசரடி, மதுரை – 16 |
| 4. ஆசிரியர் பெயர் : | பிலேமோன் ராஜா |
| எந்த நாட்டவர் : | இந்தியர் |
| முகவரி : | 45 C/1, சர்ச் சந்து, காரனேசன் தெரு, அரசரடி, மதுரை – 16 |
| 5. அச்சிடுவோர் பெயர் : | தி கிளாஸிக் பிரிண்டர்ஸ் |
| எந்த நாட்டவர் : | இந்தியர் |
| முகவரி : | 27, காக்காதோப்பு தெரு மதுரை – 625 001 |

P.C. பிலேமோன் ராஜாவாகிய நான், மேலே தரப்பட்டுள்ள விவரங்கள் எனது அறிவு, நம்பிக்கையைப் பொறுத்தவரையில் உண்மையானவை என்று இதன் மூலம் உறுதி கூறுகிறேன்.

தேதி : 11–03–2013

**P.C. பிலேமோன் ராஜா**
வெளியிடுபவர் கையொப்பம்

# கதைச்சுருக்கம்



- சகோ. P.R. சாமி (பெங்களூர்)

– தொடர்ச்சி

தேவன், யோபுவின் விசுவாசத்தின் மீதுள்ள நம்பிக்கையினாலே அந்தச் சவாலை ஏற்றார். கர்த்தர் சாத்தானை நோக்கி ''இதோ அவனுக்கு உண்டானவை எல்லாம் உன் கையிலிருக்கிறது. அவன்மேல் மாத்திரம் உன் கையை நீட்டாதே'' என்றார். தேவன் இப்படி யோபுவை சாத்தான் சோதிக்க அனுமதி தந்தார்.

சாத்தான் புறப்பட்டு போய் தன் அழிக்கும் படலத்தை ஆரம்பித்தான். முதலில் யோபுவிடமிருந்து ஒட்டகம், ஆடு, மாடுகள் போன்ற எல்லா கால்நடைகளும் பறிக்கப்பட்டன. சபேயரும், கல்தேயரும் அவைகளை பிடித்துக்கொண்டு போய் விட்டனர். இரண்டாவது அடி, யோபு தன் அருமை பிள்ளைகளை இழந்தான். பெருங்காற்று அடித்து அனைவரும் மடிந்தனர். ஆனால் யோபுவோ இந்தச் சோதனையில் தோல்வி அடையவில்லை. அதற்கு மாறாக, ''நிர்வாணியாய் என் தாயின் கர்ப்பத்திலிருந்து வந்தேன், நிர்வாணியாய் அவ்விடத்திற்கு திரும்புவேன். கர்த்தர் கொடுத்தார். கர்த்தர் எடுத்தார். கர்த்தருடைய நாமத்திற்கு ஸ்தோத்திரம் என்றான்'' (1:21).

சாத்தான் தன் தோல்வியை ஒப்புக்கொண்டானா? இல்லை. கர்த்தரிடத்தில் அனுமதி பெற்று, மூன்றாவதாக யோபுவை கொடிய பருக்களால் வாதித்தான். யோபு ஒரு ஓட்டை எடுத்து, தன்னை சுரண்டிக் கொண்டு சாம்பலில் உட்கார்ந்தான் (2:7,8). நான்காவதாக, சாத்தான், யோபுவின் மனைவியை ஏவி விடுகிறான். ''அப்பொழுது அவன் மனைவி அவனைப்பார்த்து, நீர் இன்னும் உம்முடைய உத்தமத்தில் உறுதியாய் நிற்கிறீரோ, தேவனைத் தூஷித்து ஜீவனை விடும் என்றாள்'' (2:9).

அடுத்த காட்சி, யோபுவைத்தேற்ற அவனது மூன்று நண்பர்களின் வருகை.

இவர்கள் யோபுவைத் தேற்றுவதாக எண்ணி, ''எல்லாம் உன் பாவத்தினால்தான் இந்த கஷ்டம் வந்திருக்கும்'' என்று அந்த உத்தமனான யோபுவின்மேல் குற்றச்சாட்டை சுமத்த ஆரம்பித்தனர். இந்த கதையின் பெரும் பகுதி, யோபுவுக்கும், அவன் மூன்று நண்பர்களுக்குமிடையே நடந்த சம்பாஷணைகள் ஆகும். இப்படி எல்லோராலும் கைவிடப்பட்டு

எல்லாவற்றையும் இழந்தவனாக நம் யோபு இந்த அவல நிலைக்குள்ளாக்கப்பட்டும் நங்கூரமாகிய விசுவாசத்தை உறுதியாய் பற்றிக் கொண்டிருந்தான்.

தன் நண்பர்களின் கண்ணோட்டத்தில் தவறு இருந்ததை யோபு அறிந்து இருந்தான். இருப்பினும், தனக்கு ஏற்பட்ட இந்த துர்பாக்கியமான நிலை ஏன் வந்தது என்று அறிந்தானில்லை. தன் சிருஷ்டிகர்த்தாவாகிய தேவனிடத்தில் பேச வாஞ்சையாயிருந்தான். ஆனால் அவரை காண இயலவில்லை. கடந்த காலங்களை நினைவு கூர்ந்தவனாய் தற்போதைய நிலைமைக்கு தன்னை நொந்து கொண்டான். “அவர் என்னை கொன்று போட்டாலும் அவர்மேல் நம்பிக்கையாயிருப்பேன். ஆனாலும் என் வழிகளை அவருக்கு முன்பாக ரூபகாரம் பண்ணுவேன்” என்றான் (13:15).



லூக்கா 1 : 38

அதற்கு மரியாள்:

இதோ, நான் ஆண்டவருக்கு அடிமை, உம்முடைய வார்த்தையின்படி எனக்கு ஆகக்கடவது என்றாள்.

யோபு தன் மூன்று நண்பர்களிடம் பேசினான். ஆனால் அவர்கள் அவனுக்கு சரியான உத்தரவு கொடுக்கவில்லை.

அப்பொழுது கர்த்தர் : பெருங்காற்றிலிருந்து யோபுக்கு உத்தரவாக, ‘‘அறிவில்லாத வார்த்தைகளினால் ஆலோசனையை அந்தகாரப்படுத்துற இவன் யார்? இப்போதும் புருஷனைப் போல் இடைக்கட்டிக்கொள் : நான் உன்னைக் கேட்பேன், நீ எனக்கு உத்தரவு சொல்லு” என்றார். தேவன் கேட்ட கேள்விகளுக்கு யோபு மாத்திரமல்ல, தேவன் இல்லை என்று கூறும் ஒவ்வொரு நாஸ்திகனும் பதில் சொல்லித்தான் ஆகவேண்டும். இல்லாவிடில் தோல்வியை ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும். இப்படியாக தேவன் பேசி, யோபுவின் கண்கள் திறக்கப்பட்டன.

**கடைசி காட்சி** : மகிழ்ச்சி ! ஆம் யோபுவின் வாழ்வில் வெற்றி !! அவன் விசுவாசத்திற்கு கிடைத்த மாபெரும் வெற்றி !!! அவன் விசுவாசம் பரீட்சிக்கப்பட்டு, நிரூபிக்கப்பட்டது. கர்த்தர் யோபுவின் சிறையிருப்பை மாற்றினார். யோபுவுக்குமுன் இருந்த எல்லாவற்றைப் பார்க்கிலும் இரண்டத்தனையாக அவனுக்குத் தந்தருளினார். உண்மையிலே யோபுவின் சரித்திரம் ஓர் உணர்ச்சியூட்டும் உன்னதமான கதை. இதை நீங்கள் ஒவ்வொருவரும் படித்து பலனடையுங்கள்.

# 6 தீர்க்கதரிசனத்திலிருந்து சாட்சியம்

## Evidence from Prophecy

இது வரைக்கும், திருமறைக்கு அப்பாற்பட்ட நம்பத்தகு சாட்சியத்தைப் பார்த்தோம்; அவை ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து பெத்லகேமிலே பிறந்தார், அவர் நாசரேத்திலே வளர்க்கப்பட்டார், அவர் ஞானமிகு போதகராயும், அற்புதங்களைச் செய்கிறவராய் தம்மைச் சுற்றிலுமிருந்த அநேகரைத் தம் பக்கம் ஈர்த்தார், பொந்தியு பிலாத்துவின் கரத்தினால் சிலுவையில் மரித்தார், மூன்றாம் நாளில் வேதவாக்கியங்களின்படி உயிர்ப்பிக்கப்பட்டார் என்பவைகளே!

இந்தப் பாடத்தில், மேசியாவைக் குறித்து பேசப்பட்ட சில வேத வசனங்களை ஆராய்ந்து பார்த்து விரிவாக அவரைப் பற்றி விளக்குவோம். இந்த வேத வசனங்களெல்லாம் மேசியாத்துவ தீர்க்கதரிசனங்கள் எனப்படும்.

“மேசியா” என்னும் எபிரேயப் பதம் “அபிஷேகம் பண்ணப்பட்டவர்” என்று பொருள்படும். அதாவது, “உண்மையான இராஜாவாக தேவனால் அபிஷேகம் பண்ணப்பட்டவர்” என்று பொருள். ‘‘கிறிஸ்து’’ எனும் பதம் கிரேக்கப் பொருளில் அதே அர்த்தமுடையது.

இயேசு கிறிஸ்துவினால் 300க்கு மேற்பட்ட பழைய ஏற்பாட்டின் தீர்க்கதரிசனங்கள் நிறைவேற்றப்பட்டதாக புதிய ஏற்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த தீர்க்கதரிசன நிறைவேற்றங்கள்தான், ஜஸ்டின் மார்டின் என்பவரின் ஆவியை எழுப்பிவிடப்பட்ட தீ சுடராய் அவரது ஆழமான உணர்வுகளை தூண்டக் கூடியவைகளாயிருந்தன.

பின் வரும் பத்தியில், 300க்கு மேற்பட்ட தீர்க்கதரிசனங்களில் **65** மட்டும் வரிசைபடுத்துவோம்.

ஒவ்வொரு தீர்க்கதரிசனதையும் அடுத்து, அடைப்புக் குறிகளில் முன் குறித்த பழைய ஏற்பாடு, அது நிறைவேறிய வசனங்களையும் நீங்கள் காணலாம்.

**அவரது வம்ச வரலாறு**

சில மேசியாத்துவ தீர்க்க தரிசனங்கள் இயேசு கிறிஸ்துவின் இரத்த சம்பந்தப்பட்ட வம்சாவளியை அடையாளப்படுத்துகின்றன. அவர் ஏவாளின் வித்தில் வந்து, சாத்தானுடைய தலையை நசுக்குவார் (ஆதியாகமம் 3:15; கலாத்தியர் 4:4;

மத்தேயு 1:20). அவர் ஆபிரகாமின் சந்ததியாயிருப்பார் (ஆதியாகமம் 22:18; மத்தேயு 1:1; கலாத்தியர் 3:16), ஈசாக்கின் சந்ததியாயும், (ஆதியாகமம் 21:12; 17:19; லூக்கா 3:23,24), யாக்கோபின் சந்ததியாயும், (ஆதியாகமம் 35:10-12; லூக்கா 3:23;24), யூதாவின் சந்ததியாயும் (ஆதியாகமம் 49:10; லூக்கா 3:23,33), ஈசாயின் சந்ததியாயும் (ஏசாயா 11:1; லூக்கா 3:23,32), தாவீதின் சந்ததியாயுமிருப்பார் (எரேமியா 23:5; 2 சாமுவேல் 7:12-16; சங்கீதம் 132:11; லூக்கா 3:23,31).

படிப்படியாக, தீர்க்கதரிசிகள் மேசியாவின் வம்சாவளியை குறிப்பிடுகிறார்கள். ஆபிரகாமுக்கு எட்டுக் குமாரர்கள் இருந்தும் ஈசாக்கின் வம்சாவளியில் மேசியா வருவார் என்று குறிப்பாகச் சொல்லப்பட்டது. ஈசாக்கு என்பவர்க்கு இரண்டு குமாரர்களான யாக்கோபு, ஏசா இருந்த போதிலும், யாக்கோபின் வம்சாவளியிலே மேசியா வர வேண்டியதாயிருந்தது. யாக்கோபுக்கு பன்னிரண்டு குமாரர்கள் இருந்தார்கள்; ஆனாலும் யூதாவின் சந்ததியில் கிறிஸ்து வரவிருந்தார். யூதாவின் கோத்திரத்தில், ஈசாய், தாவீதின் சந்தததியில் மேசியா வருவார் என்று முன்னுரைக்கப்பட்டது.

லூக்கா 10 : 39
மரியாள்:
இயேசுவின் பாதத்தருகே உட்கார்ந்து அவருடைய வசனத்தை கேட்டுக்கொண்டிருந்தாள்



அப் 9 : 36
யோப்பா பட்டணத்தில்...தொற்காள்... என்னும் சீஷி இருந்தாள். அவள் நற்கிரியைகளையும் தருமங்களையும் மிகுதியாய்ச் செய்து கொண்டு வந்தாள்

**தீர்க்கதரிசி, ஆசாரியர், இராஜா**

பிற பழைய ஏற்பாட்டு வசனப்பகுதிகள், மேசியா மோசேயைப் போன்ற தீர்க்கதரிசியாகவும் (உபாகமம் 18:18; மத்தேயு 21:11; லூக்கா 7:16; யோவான் 4:19; 6:14; 7:40), பரிசுத்த ஆவியினால் அபிஷேகம் பண்ணப்பட்டவராகவும், ( சங்கீதம் 45:7; ஏசாயா 11:2; 61:1-2; மத்தேயு 3:16; லூக்கா 4:15-21,43) குறிப்பிடப்பட்டார். மெல்கிசேதேக்கின் முறைமையின்படி அவர் தீர்க்கதரிசியாகவும், ஆசாரியனாகவும், இராஜாவாகவும் என்றென்றைக்குமிருப்பார் (சங்கீதம் 2:6; 110:4; மத்தேயு 2:6; எபிரேயர் 3:1; 5:5,6). அவர் தேவனுடைய பாடுபடும் தாசனாயிருந்து, புறஜாதிகளையும், யூதர்களைப் போல மீட்பார் எனப்பட்டது (ஏசாயா 42:1-4; மத்தேயு 12:18-21).

### அவருடைய பிறப்பைக் குறித்த சூழல்கள்

குறிப்பிட்ட காலத்தில் மேசியா வருவார் (ஆதியாகமம் 4:10; தானியேல் 9:24,25; லூக்கா 2:1). அவர் கன்னிகையினிடத்தில் பிறப்பார் (ஏசியா 7:14; மத்தேயு 1:18-25). பெத்லகேமில் பிறப்பார் (மீகா 5:2, மத்தேயு 2:1; லூக்கா 2:5,6). இராஜாக்கள் அவருக்கு வெகுமதிகளை கொண்டு வருவார்கள் (சங்கீதம் 72:10; ஏசாயா 60:6; மத்தேயு 2:1-11). கபடற்ற பிள்ளைகள் கொல்லப்படுவதால் பெத்லகேமில் அழுகையும் புலம்பலும் உண்டாயிருக்கும் (எரேமியா 31:15; மத்தேயு 2:16-18).

### அவரது ஊழியம்

வனாந்திரத்தில் கூப்பிடுகிற முன்னோடியின் மேசியாவின் ஊழியம், ''கர்த்தருக்கு வழியை ஆயத்தப்படுத்துங்கள்'' எனும் சத்தத்தைத் தொடர்ந்து வரும் (ஏசாயா 40:3; மல்கியா 3:1; லூக்கா 1:17; மத்தேயு 3:1,2). அவரின் ஊழியம் கலிலேயாவில் துவங்கும். (ஏசாயா 9:1,2; மத்தேயு 4:12,16:23). அவர் உவமையில் போதிப்பார் (சங்கீதம் 78:2; மத்தேயு 13:34,35) மற்றும் அற்புதங்களை நடப்பிப்பார் (ஏசாயா 35:56; மத்தேயு 9:35; 11:4-6; யோவான் 11:47). செவிடர்கள் கேட்பார்கள், குருடர்கள் காண்பார்கள் (ஏசாயா 29:19; மத்தேயு 11:4-5). பின்னதாக அவர் கழுதையின் மேல் சவாரி செய்து, எருசலேமில் நுழைந்து இரட்சிப்பைக் கொண்டு வருவார். (சகரியா 9:9; மத்தேயு 21:1-5; லூக்கா 19:36,37). அவர் தேவாலயத்தில் பிரவேசிப்பார் (ஆகாய் 2:7-9; மல்கியா 3:1; மத்தேயு 21:12), தேவனுடைய வீட்டின் மேல் தமக்குள்ள வைராக்கியத்தை விளங்கப் பண்ணுவார் (சங்கீதம் 69:9; யோவான் 2:15-17).

### அவரது தெய்வீக இயல்பு

மேசியா நித்தியத்திலிருந்து வருவார் (மீகா 5:2; ஏசாயா 9:6,7; 41:4; 44:6; 48:12; கொலோ செயர் 1:17; யோவான் 1:12; 8:45; 17:5,24), கர்த்தர் என்று அழைக்கப்படுவார் (சங்கீதம் 110:1; லூக்கா 2:11; 20:41-44). தேவன் நம்மோடிருக்கிறார் எனும் பொருள்படும் இம்மானுவேல் என்று அவர் அழைக்கப்படுவார் (ஏசாயா 7:14; மத்தேயு 1:23), அவர் நம்முடைய நியாயாதிபதியாயிருப்பார் (ஏசாயா 33:22; யோவான் 5:30).

### அவர் புறக்கணிக்கப்படுவார்

அவர் தமது சொந்த ஜனங்களால் புறக்கணிக்கப்படுவார், (சங்கீதம் 69:8, ஏசாயா 53:3, யோவா 1:11;7:5,48).

அவர் யூதருக்கு "இடறுதலுக்கு ஏதுவான கன்மலையும் தடுக்கலின் கல்லுமாயிருப்பார் (ஏசாயா 8:14; 28:16; ரோமர் 9:32), புறஜாதிகளுக்கு வெளிச்சமாயும் (ஏசாயா 60:3; அப்போஸ்தலர் 13:47-48), இருப்பார். எந்த முகாந்திரமுமின்றி பகைக்கப்பட்டு (சங்கீதம் 69:4; ஏசாயா 49:7; யோவான் 7:48; 15:25), அதிகாரிகளால் புறக்கணிக்கப்படுவார். (சங்கீதம் 118:22; மத்தேயு 21:42; யோவான் 7:48), சிநேகிதனால் காட்டிக் கொடுக்கப்பட்டு (சங்கீதம் 41:9; சங்கீதம் 55:12,14; மத்தேயு 10:4 யோவான் 13:18,21), தனது சீஷர்களால் கைவிடப்பட்டு ( சகரியா 13:7; மத்தேயு 26: 31-56; மாற்கு 14:50), முப்பது வெள்ளிக்காசுக்காக் காட்டிக் கொடுக்கப்படுவார் (சகரியா 11:12; மத்தேயு 27:5-7). பொய் சாட்சிகளால் அவர் குற்றஞ்சாட்டப்படுவார் (சங்கீதம் 35:11; மத்தேயு 28:59-61). ஆகிலும் தம்மைக் காப்பாற்றிக் கொள்வதற்காக தமது வாயைத் திறக்கமாட்டார் (ஏசியா 53:7; மத்தேயு 27:12-19). அவர் தமது முதுகிலும் முகத்திலும் அடிக்கப்படுவார் (ஏசாயா 50:6; மீகா 5:1; மத்தேயு 26:67; 27:30), முகத்திலே துப்பப்படுவார் (ஏசாயா 50:6; மத்தேயு 26:67; 27:30), பரியாசம் பண்ணப்படுவார் (சங்கீதம் 22:7,8; மத்தேயு 27:31,39-44), அடிக்கப்படுவார் (சங்கீதம் 50:6; மத்தேயு 26:67; 27:26,30). அவர் காயப்பட்டு, நொறுக்கப்பட்டிருப்பார் (ஏசாயா 53:5; மத்தேயு 27:26), தமது சிலுவையின் பாரத்தினால் கீழே விழுவார் (சங்கீதம் 109:24,25; யோவான் 19:17; லூக்கா 23:26).

**அவருடைய சிலுவை மரணம்**

அவர் மரத்திலே தூக்கப்பட்டு சாபத்துக்குள்ளாவார் (உபாகமம் 21:23; 3:13). அவருடைய கைகளும் கால்களும் உருவக்குத்தப்படுவார் (சங்கீதம் 22:16; சகரியா 12:10; லூக்கா 23:33; யோவான் 19:18,37; 20:25), ஆயினும் அவருடைய எலும்புகளில் ஒன்றும் முறிக்கப்படுவதில்லை (யாத்திராகமம் 12:46; சங்கீதம் 34:20; யோவான் 19:33-36). அவர் தாகத்தால் பாடுபடுவார் (சங்கீதம் 22:15; 69:21; யோவான் 19:28), கசப்பான காடி அவருக்கு குடிக்கக் கொடுப்பார்கள், (சங்கீதம் 69:21;மத்தேயு 27:34). அவர், "என் தேவனே, என் தேவனே, ஏன் என்னைக் கை விட்டீர்" என்று கதறுவார் (சங்கீதம் 22:1; மத்தேயு 27:46). தேவனிடத்தில் தம்முடைய ஆவியை ஒப்புக் கொடுப்பார் (சங்கீதம் 31:5; லூக்கா 23:46). அவருடைய விலா எலும்பில் குத்துவார்கள் (சங்கீதம் 22:14; சகரியா 12:10; யோவான் 19:34). அக்கிரமக்காரரில் ஒருவராக எண்ணப்படுவார் (ஏசாய 53:12; மத்தேயு 27:38; லூக்கா 23:32-33), ஆகிலும் அநேகருடைய பாவங்களை

சுமப்பார் (ஏசாயா 53:12; லூக்கா 23:34), அவருடைய நண்பர்களும் தம்மால் நேசிக்கப்பட்டவர்களும் தொலைவிலே நின்று அவரை பார்ப்பார்கள் (சங் 38:11; லூக்கா 23:49). ஜனங்கள் பரியாசம் பண்ணி தங்கள் தலைகளைத் துலுக்குவார்கள் (சங்கீதம் 22:17; லூக்கா 23:35). மத்தியான வேளையிலே அந்தகாரம் சூழ்ந்து கொள்ளும் (ஆமோஸ் 8:9; மத்தேயு 27:45). அவருடைய வஸ்திரம் பங்கிடப்பட்டு அவரது உடையின் மேல் சீட்டுப் போடுவார்கள் (சங்கீதம் 22:18; யோவான் 19:23,24).

**அவரது அடக்கமும் உயிர்த்தெழுதலும்**

அவர் ஐசுவரியவனாலே அடக்கம் பண்ணப்படுவார். (ஏசாயா 53:9; மத்தேயு 27:57-60). ஆனால், அவரது சரீரம் அழிவைக் காண்பதில்லை (சங்கீதம் 16:10; அப்போஸ்தலர் 2:31). அவர் மரித்தோரிலிருந்து எழுப்பப்படுவார் (சங்கீதம் 2:7,16:10; அப்போஸ்தலர் 2:27-32). அவர் உன்னதத்திற்கு ஏறுவார் (சங்கீதம் 68:18; லூக்கா 24:51; அப்போஸ்தலர் 1:9), தேவனுடைய வலது பாரிசத்தில் வீற்றிருப்பார் (சங்கீதம் 110:1; எபிரேயர் 1:3), அக்கிரமக்காரருக்காக வேண்டிக் கொள்வார் (ஏசாயா 53:12; ரோமர் 8:34).

**திடீரென நடந்த ஒரு விபத்தா?**

இயேசு கிறிஸ்து நிறைவேற்றின **65** தீர்க்கதரிசனங்களை இப்பொழுது பார்த்தோம். இயேசு அவைகளை நிறைவேற்றுவதற்கு இருந்த சாதகமான சூழ்நிலை என்ன?

பீட்டர் ஸ்டோனர் என்பவர், தனது **'விஞ்ஞானம் பேசுகிறது'** எனும் புத்தகத்தில், எட்டு மேசியாத்துவ தீர்க்கதரிசனங்களைச் சுட்டிக் காட்டி, எந்த நபராலும் நிறைவேற்ற சாதகமான சூழ்நிலையை தீர்மானித்து இன்றைய உலகோடு ஒப்பிட்டுக் காட்டுகிறார். அவர், "எந்த ஒரு மனிதனுக்குச் சந்தர்ப்பம் அளிக்கப்பட்டாலும், ... 10-ல் 1 என்ற 17வது சக்தியில் எட்டு தீர்க்கதரிசனங்களையும் நிறைவேற்றலாம்'' என்றார். வழக்கத்துக்கு மாறான எட்டு தீர்க்கதரிசனங்களையும் ஒரே மனுசனால் நிறைவேற்றப்படலாம் என்பதற்கு விளக்கமளிக்கும் பொருட்டு, பின்வரும் விளக்கத்தை ஸ்டோனர் கொடுத்தார்: 17வது சக்தி வெள்ளி டாலர்களில் 10ஐ எடுத்து டெக்ஸாஸ் மாநிலத்திலும் இரண்டு அடி உயரத்தில் மூடும். பிறகு ஒரு வெள்ளி டாலரை எடுத்து மற்றவைகளோடு கலக்குங்கள். பிறகு கண்கள் கட்டப்பட்ட ஒரு மனுஷனை தான் விரும்பும் தொலைவுக்கு நடந்து, கலக்கப்

பயன்படுத்திய அந்த குறிப்பிட்ட டாலரை எடுத்து வரவேண்டும் என்று சொல்லுங்கள். அந்த குறிப்பட்ட டாலரை கண்டுபிடித்து எடுத்து வருவதற்கான வாய்ப்புகள் தான் எட்டுத் தீர்க்க தரிசனங்களை தீர்க்கதரிசிகள் எழுதிய போது ஒரே மனிதனால் அந்த தீர்க்கதரிசனங்களை நிறைவேற்றுகிறச் சூழ்நிலைகளும் இருந்திருக்கும்.

பிறகு, பேராசிரியர் ஸ்டோனரும் அவரது 600 மாணவர்களும் நாற்பத்தி எட்டு தீர்க்கதரிசனங்களை ஒருவரால் நிறைவேற்ற ஏதுவான சாத்தியக் கூறுகளை கணக்கிட்டுப் பார்த்தனர். இதற்கான சாத்தியக் கூறு, (அமெரிக்க மதிப்புப்படி) லட்சம் கோடியே, லட்சம் கோடியே, லட்சம் கோடியே, லட்சம் கோடியே, லட்சம் கோடியே, லட்சம் கோடியே, லட்சம் கோடியே, லட்சம் கோடியே, லட்சம் கோடியே, லட்சம் கோடியே, லட்சம் கோடியே, லட்சம் கோடியில் ஒரே ஒரு வாய்ப்பு உண்டு (இதுவே ஐரோப்பிய மதிப்பில், 1க்கு அடுத்து 18 பூஜ்யங்கள்).

இந்த எண்ணின் அளவை நாம் காணத்தக்கதாக, பேராசிரியர் ஸ்டோனர் அணுவின் அளவை ஒப்பிடுகிறார். பத்து லட்சம் அணுக்களை ஒன்றாக்கினால் ஒரு முடியளவு தோற்றம் பெறும். விஞ்ஞானிகளை பேட்டி கண்ட பிறகு, ஸ்டோனர் முழு அண்ட சராசரத்திலும் உள்ள அணுக்களை மதிப்பிட்டார். அவர் “பழைய ஏற்பாட்டின் நாற்பத்தியெட்டு தீர்க்கதரிசனங்களை யாரோ ஒரு தனிப்பட்ட நபரால் நிறைவேற்றுவதற்கான சாத்தியக்கூறுகள், ஒரு நபர் குறிப்பான நோக்கம் எதுவுமின்றி, இலட்சம் கோடியே ஆயிரம் கோடியில் ஒரு வாய்ப்பு உண்டாவதற்கு சமமானது”, என்றார்.

இவை நிலையற்ற வாய்ப்புகள், அல்லது சாத்தியக் கூறுகள். இருந்தும் இயேசு, இயேசு மட்டுமே, 300க்கு மேற்பட்ட மேசியாத்துவ தீர்க்கதரிசனங்களை நிறைவேற்றினார். இது ஏதோ திடீரென நடந்த ஒரு விபத்து போன்ற செயலல்ல. இந்த தீர்க்கதரிசன நிறைவேற்றங்கள், ஞானமிக்க தேவன், இயேசு கிறிஸ்து மூலமாகத் தம்மை வெளிப்படுத்தினதற்கான ஆதாரங்கள்.

இயேசு தாம் தீர்க்கதரிசனங்களை நிறைவேற்றுவதை அறிந்திருந்தார். தமது உயிர்த்தெழுதலைத் தொடர்ந்து தமது அப்போஸ்தலரிடம் அவர், “மோசேயின் நியாயப் பிரமாணத்திலும், தீர்க்கதரிசிகளின் ஆகமங்களிலும், சங்கீதங்களிலும் என்னைக் குறித்து எழுதியிருக்கிறவைகளெல்லாம் நிறைவேற வேண்டியதென்று, நான் உங்களோடிருந்தபோது உங்களுக்குச் சொல்லிக் கொண்டு வந்த விசேஷங்கள் இவைகளே” என்றார் (லூக்கா 24:44).

யோவேல் 2 : 28-32 ல் கூறப்பட்டபடி

# மாம்சமான யாவர் மேலும் அவர் தம் ஆவியை ஊற்றுகிறாரா?

பரிசுத்த ஆவியை அப்போஸ்தலரைப் போலவே தாங்களும் பெறுவதாக போதிப்போர், யோவேல் 2:28-32ன் படி இன்றும் பரிசுத்த ஆவியைப் பெறுகிறோம் என்று போதிக்கின்றனர். திருமறை பேசும் மூன்றும் யுகங்களையும் இவர்கள் பகுத்துப் பார்க்கும் பெலனற்றவர்கள் (எபிரேயர் 1:1). பகுத்துப் பார்ப்பார்களேயாகில் மேற்குறித்த யோவேலின் தீர்க்கதரிசனம் புதிய ஏற்பாட்டின் பின்பகுதியில் வாழும் நமக்குப் பொருந்தாது என்பதை புரிந்து கொள்வர். வசனத்தை வாசிப்போம். (யோவேல் 2:28-32): “அதற்குப் பின்பு நான் மாம்சமான யாவர்மேலும் என் ஆவியை ஊற்றுவேன், அப்பொழுது உங்கள் குமாரரும் உங்கள் குமார்த்திகளும் தீர்க்கதரிசனஞ் சொல்லுவார்கள்: உங்கள் மூப்பர் சொப்பனங்களையும், உங்கள் வாலிபர் தரிசனங்களையும் காண்பார்கள். ஊழியர்க்காரர் மேலும் ஊழியக்காரிகள் மேலும் அந்நாட்களில் என் ஆவியை ஊற்றுவேன். வானத்திலும் பூமியிலும் இரத்தம் அக்கினி புகை ஸ்தம்பங்களாகிய அதிசயங்களைக் காட்டுவேன். கர்த்தருடைய பெரிதும் பயங்கரமுமான நாள் வருகிறதற்கு முன்னே சூரியன் இருளாகவும், சந்திரன் இரத்தமுமாக மாறும். அப்பொழுது கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொள்ளுகிறவன் எவனோ அவன் இரட்சிக்கப்படுவான்; கர்த்தர் சொன்னபடி சீயோன் பர்வதத்திலும் எருசலேமிலும் கர்த்தர் வரவழைக்கும் மீதியாயிருப்பவர்களிடத்திலும் இரட்சிப்பு உண்டாயிருக்கும்.

இந்த வசனத்தின் நிறைவேற்றும் குறித்து பேதுரு பெந்தைகோஸ்தே நாளில் விளக்கமளிக்கையில், “தீர்க்கதரிசியாகிய யோவேலினால் உரைக்கப்பட்டபடியே இது நடந்தேறுகிறது. கடைசி நாட்களில் நான் மாம்சமான யாவர் மேலும் என் ஆவியை ஊற்றுவேன்... கர்த்தருடைய நாமத்தை தொழுது கொள்ளுகிறவனெவனோ அவன் இரட்சிக்கப்படுவான், என்று தேவன் உரைத்திருக்கிறார்” என்றார் (அப்2:16-21) இதில் யோவேல் குறிப்பிட்ட இதற்குப்

பின்பு என்பது "கடைசி நாட்கள்" என்று பேதுரு கூறியிருப்பது மிகவும் குறிப்பிடதக்கது. நன்கு தெளிவாக்க மேற்குறித்த வசனப்பகுதியை 10 பாகங்களாகப் பகுத்து ஆராய்வோமாக.

1. "கடைசி நாட்களில்" என்று பேதுரு குறிப்பிட்ட யோவேலின் வார்த்தை "இதற்குப் பின்பு" (யோவேல் 2:28; அப் 2:17) எந்த தீர்க்கதரிசனப்புத்தகத்தை வாசித்தாலும் முறையாகப் புரிந்து கொள்ள அப்புத்தகத்தின் வரலாற்றுப் பின்னணி சமுதாயப் பின்னணி, மார்க்கப் பின்னணி ஆகியவற்றை அறிந்து கொள்வது மிகவும் அவசியமான ஒன்று. ஏனெனில் " வேதத்திலுள்ள எந்த தீர்க்கதரிசனமும் சுய தோற்றமான பொருளை உடையதாயிராதுதென்று நீங்கள் முந்தி அறிய வேண்டியது" என்று பேதுரு எச்சரித்தார் (2பேதுரு 1:20) வாசகரின் சுயமான சிந்தையில் தோன்றும் அர்த்தம் தீர்க்கரிசியின் வார்த்தையை மாற்றியோ, கூட்டியோ, குறைந்தோ போதிக்க வாய்ப்புகள் அதிகம்; அது சாபத்தில் கொண்டுபோய் விடும் (வெளி 22:18,19).

யோவேல் புத்தகத்தின் பின்னணியில் ஏழு வயதே நிரம்பிய ஒரு சிறு பையனாக அரசாட்சியில் அமர்த்தப்பட்ட யோவகாஸ் யூதாவில் ஆண்டு கொண்டிருக்கிருக்கும்போது, யோவேல் தீர்க்கதரிசனம் உரைத்தார். அது கி.மு. 852-ம் ஆண்டு ஜனங்களின் பாவத்தினிமித்தம் அசீரியர்களைக் கொண்டு எருசவேமையும் யூதேலாவையும் அழிப்பதாக முன்னுரைத்தார். யோவேலின் செய்தியில் யூதாவின்மேல் வரும் தண்டனை , பிறகு அவர்களுக்கும் மன்னிப்பு, எதிர்காலத்தில் நடக்க விருந்த ஆசீர்வாதங்களையும், நிகழ்வுகளையும் குறிப்பிடுகறார். எனவே தமது மூன்றாவது செய்தியை, யூதாவின் அழிவு மற்றும் அவர்களை மன்னித்து தேவன் ஏற்றுக் கொள்ளுவார் என்று சொன்னபிறகு,



அப் 16 : 14

"இரத்தாம்பரம் விற்கிறவளும் தேவனை வணங்குகிறவளுமாகிய லீதியாள் என்னும் பேருள்ள ஸ்தீரி கேட்டுக்கொண்டிருந்தாள்; பவுல் சொல்லியவைகளைக் கவனிக்கும்படி கர்த்தர் அவள் இருதயத்தை திறந்தருளினார்."

யோவேல் 2:28 ல் “ இதற்குப்பின்பு” என்று துவங்குகிறார். இதன் காலம் “ கடைசி நாட்கள் ’’ என்று பேதுரு குறிப்பிட்டார்(அப்.2.17)

“ கடைசி நாள் ” அல்ல “ கடைசி நாட்கள் ” என்று பேதுரு அடையானப் படுத்துவதால், ஒரு நெடுநாளைய நிறைவேறுதலைக்குறிக்கிறதுது. கடைசி நாள், அல்லது கடைசி நாட்கள் என்று வருகின்ற இடங்களிலெல்லாம் அவ்வார்த்தை எந்த யுகத்தில் குறிப்பிடுகிறதோ அந்த யுகத்தின் “முடிவு நாட்களில் ” என்று மோசேயின் யுகம் முடிவடையும் கடைசி நாட்கள் என்று பொருள். மோசேயின் யுகம் ஒரு நாளில் முடிவடைந்ததல்ல. கிறிஸ்து பிறந்து சிலுவையில் மறித்து உயிர்ந்தெழுந்து 50 நாட்கள் வரை கிறிஸ்துவின் யுகம் துவங்கவில்லை. பெந்தெகோஸ்தே நாளில் தான் கிறிஸ்துவின் யுகம் துவங்துகிறது. ஆகிலும் யூத மார்க்கமாகிய மோசேயின் யுகம் தன்னுள் கொண்டிருந்த தேவாலயம் குறித்த உயர் நம்பிக்கை,பழைய பிரமாணத்தின் கீழான ஆராதனை, ஓய்வு நாள் முறைமைகள்,ஆகியவை கி.பி.70ல், எருசலேமின் அழிவின் போதே முடிவுக்கு வந்தது. அதிலிருந்துதான் கிறிஸ்தவம் தனித்துவ நிலையை அடைந்தது.

யோவேல் 2:28, அப்போஸ்தார் 2:16,17ல் குறிப்பிடப்படும். “கடைசி நாட்கள் ’’ பேதுரு துவக்கிவைத்து பேசுகிறபடி, யேர்வேவின் முழு தீர்க்கதரிசனமும் கி.பி.33 லிருந்து சபை ஸதாபிக்கப்பட்ட காலந்தொட்டு, கி.பி.70 வரை சபை அல்லது கிறிஸ்தவம் தனித்தும் பெறும் காலம் வரை, அதை ஸ்திரப் படுத்த தேவன் செய்ய விருந்த சம்பவங்களை விளக்கப் படுத்துகிறது. எனவே அன்று கலை ஸ்தாபிதம் பெற்றிருந்த ஆரம்ப கால நிறைவேற்றம் இன்று சுமார் 1980 ஆண்டுகளுக்கு பிறகு வாழும் எவருக்கும் பொருந்துபவையல்ல. யோவேல் 2:32 ல் கூறப்படும் கர்த்தருடைய நாமத்தை தொழுது கொள்ளுகிற எவனும் இரட்சிக்கப்படுவான் என்கது மட்டும் ஆண்டவருடைய இராண்டாம் வருகை மட்டும் நிறைவேறிக் கொண்டே இருக்கும்.

2. பரிசுத்த ஆவியின் ஊற்றுதல் “ மாம்சமான யாவர் மேலும்’’ என்று யோவேல் கூறினார்.மாம்சமான யாவர்மேலும் என்பதை பகுத்துப் பார்க்காமல், நேரடிப் பொருளில் எடுத்துக்கொள்வோர் கவனிக்க வேண்டும். மாம்சமான யாவர்மேலும் என் ஆவியை ஊற்றுவேன், என்று

குறிப்பிடுவது, மாமிசத்தையுடைய யானை, குதிரை, புலி, சிங்கம்,ஆடு, மாடு, கோழி, புறா, பாம்பு, பல்லி, மனுஷர்,மீன், நண்டு போன்ற எல்லா மாமிசங்களையும் குறிப்பிடலாமா? 1 கொரிந்தியர் 15:39 -ல் , "எல்லா மாம்சமும் ஒரே விதமான மாம்சல்ல; மனுஷருடைய மாம்சம்வேறே, மிருகங்களுடைய மாம்சம் வேறே, மச்சங்களுடைய மாம்சம் வேறே, பறவைகளுடைய மாம்சம்வேறே" என்று பவுல் குறிப்பிடுவது உண்மை என்றறிவோம். எனவே மேற்குறித்த வசனம் " மாம்சமான யாவர் மேலும் என்று கூறுவதால் மனுஷரை மட்டுமே குறிப்பிடுகிறது என்ற முடிவுக்கு வருகிறோம். அப்படியானால் எனது அடுத்த கேள்வி எல்லா மனுஷர் மேலுமா? கிறிஸ்தவனோ கிறிஸ்தவனல்லாதவனோ யாராயிருந்தாலும் சரி தமது ஆவியை ஊற்றுவேன் என்று சொன்னாரா? இல்லை! ஏனெனில் வச. 32-ல் கர்த்தருடைய நாமத்தை தொழுது கொள்கிறவனுக்கு'' என்று நிரூபணமாகிறது. எனது அடுத்த கேள்வி கர்த்ததை தொழுது கொள்ளுகிற எல்லோருக்குமா?இல்லை! ஏனெனில் யோவேலின் இந்த தீர்க்கதரிசனம் வரை யூதர்கள் கர்த்தரை தொழுது கொண்டுதான் இருந்தார்கள். ஆனால் யோவேல் புதிதாக வேறொரு கூட்டத்தைப் பேசுகிறார். அதிலும் குறிப்பாக, ஆவியானவர் ஊற்றப்படும் காலத்தின் நிறைவில் சில அடையாளங்கள் நடந்து, கர்த்தரை தொழுது கொள்ளுகிற கூட்டம், இரட்சிப்பை மட்டும் பெறம் கூட்டம் என்பதை மறைபொருளில் கூறபடுவதைக் காணலாம் எனவே எக்காலத்திலும் கர்த்தரைக் தொழுது கொள்ளும் " எல்லோருக்கும்" ஆவியை ஊற்றுவார் என்று பொருள் கொள்ள இயலாது. ஆணித்தரமான ஆதாரங்கள் தொடரும்.

அன்புடன்
**இ.ஏ.ஆறுமுகம் (போதகர்)**
திண்டுக்கல்.



மேரி கியூரி (1867 - 1934)
– கதிர்இயக்கத்திற்கு
நோபல் பரிசு பெற்றவர்

மதர் தெரசா (1910 - 1997)
– மக்கள் சேவைக்காக அறியபட்டவர்

சகோதரி நிவேதிதா
– விவேகானந்தரால் **பெண் சிங்கம்** என்றும், தாகூரினால் **லோக் மாதா** என்றும் போற்றப்பட்டவர்

# 1 கீழ்படிமையில் வளர்த்தல்



Betty Choate

– தொடர்ச்சி

**பயிற்றுவித்தல்**

நல்ல பண்புகளை தெரிந்தவர்களாகவே குழந்தைகள் பிறப்பதில்லை. அவைகளை கற்றுக்கொடுப்பதே பெற்றோரின் பொறுப்பு. மேலும், பிள்ளைகளை நற்பண்புகளில் வளர்ப்பதற்கு நீங்கள், கவனமாக இருக்க வேண்டும். அவர்கள் என்ன செய்கிறார்கள் என்பதில் கவனம் செலுத்த வேண்டும்; மேலும், வாயாலே சொல்லி அவர்களுக்கு அறிவுறுத்த வேண்டும்; நம்முடைய முன்மாதிரியினால் (நடக்கை) அவர்களை வடிவமைக்க வேண்டும், மற்றும் இந்த பயிற்சியை வலுவூட்ட கீழ்படிதலை உருவாக்க வேண்டும். நினைவில் கொள்ளுங்கள், நீங்கள் பயிற்றுவிப்பது வெறும் குழந்தைகளை என்று நினைத்துவிடாதீர். மாறாக, நாளை பெரியவர்களாக மாறப் போகிறவர்களை.

பெரியவர்களிடம் மரியாதையுடன் நடக்கவும், மரியாதையுடன் பேசவும் (சொல்லுங்க 'uncle', 'சொல்லுங்க 'Aunty', சரி 'தாத்தா', சரிங்க 'பாட்டி') அவர்களுக்கு கீழ்படியவும், அவர்களுக்கு உதவவும் பிள்ளைகளுக்கு சிறுவயதிலேயே கற்றுக்கொடுங்கள்;

மற்றவர்கள் என்ன செய்கிறார்கள் என்பதையும், அவர்கள் பேசிக்கொண்டிருப்பதையும் கவனிக்கும்படி அவர்களுக்கு கற்றுக்கொடுங்கள்; அதாவது மற்றவர்கள் கருத்துக்களை, செயல்களைப் பற்றி அறிந்து கொள்ளாமலே, தங்கள் மனதில் இருப்பதையும், தங்களைப் பற்றியும் மட்டுமே நினைத்துக் கொண்டு இடையூறு செய்யாமல் இருக்க உணர்த்துங்கள்.

தங்கள் உடன்பிறந்தவர்களுடன் நன்றாக பழகும்படி பிள்ளைகளுக்கு கற்றுக்கொடுக்க வேண்டும். போட்டி மனப்பான்மையும், சண்டை போடுதலும் பள்ளிகளில் பிள்ளைகளுடைய தொடர் பிரச்சனையாகும்; ஏனெனில் அவர்களுக்கு வீட்டிலேயே சண்டையிடுதல் முற்றிலும் தவறு என்று கற்பிக்கப்படுவதில்லை.

பிள்ளைகளின் ஒவ்வொரு நிலையிலும் நாம் அவர்களுடன் இருந்து கற்பித்துக் கொண்டே இருக்கு வேண்டும். உணவு உண்ணும்போது நற்பண்புகளை கடைபிடிக்க கற்பியுங்கள்; கீழே சிதறாமல் சரியாக வாயில் சாப்பாட்டை போடவும், வாயை மூடிக் கொண்டு உணவை மெள்ளவும், ஒரு இடத்திலேயே அமர்ந்து உண்ணவும் கற்பியுங்கள். வீட்டில் இருக்கும்போதே தங்கள் உணவையும், குடிக்கும் ஆகாரத்தையும் ஒரு இடத்தில் உட்கார்ந்து எடுத்துக்கொள்ளப் பழக்கப்படுத்தப்படாத குழந்தைகள், வெளியிலும் அதையே செய்வார்கள்; அது நல்ல பழக்கம் அன்று.

மேலும், தாங்கள் செய்வது இன்னதென்று உணர்ந்திருக்கும்படி அவர்களுக்கு கற்றுக்கொடுங்கள்; அதாவது அவர்கள், தங்களையே திரும்பிப் பார்த்து, தாங்கள் விட்டுவரும் அவலட்சனமான விஷயங்களை காண உதவுங்கள். சிறுபிள்ளைகள் விளையாடின பின் அவர்கள் சிதறடித்த விளையாட்டுப் பொருட்களை, அவர்களேயே எடுத்து வைக்கும்படி பயிற்சி கொடுங்கள்.

வீட்டில் பிள்ளைகள் பொருட்களை எப்பொழுதுமே சிதறடித்து, இடங்களை அசுத்தப்படுத்துவதை ஒரே நபராக இருந்து ஒரு தாய் மட்டுமே சரி செய்து கொண்டிருப்பது இயலாத ஒன்று. சிறுபிள்ளைகளை ஒழுக்கமின்மையிலேயே சிறு வயதில் இருந்து பயிற்றுவித்தால், பெரியவர்கள் ஆனாலும் அவர்கள் ஒழுக்கமின்மையிலேயே இருப்பார்கள்; அப்படிப்பட்ட நபரை திருமணம் செய்யும் ஆணோ அல்லது பெண்ணோ மிகவும் பாதிக்கப்படுவார்கள்.

## தண்டனை

பொதுவாக குழந்தைகள் தண்டிக்கப்படும்போதோ, அடம்பிடிக்கும்போதோ-தொடர்ந்து சத்தத்துடன் அழவோ, விடாமல் கோபத்தை வெளிப்படுத்தவோ செய்வார்கள்; ஆனால் அப்படிப்பட்ட குழந்தையை ஒரு ரூமில் தனியாக அடைத்து வைத்துவிட்டால், உடனே அழுகையை நிறுத்திவிடும்; ஏனெனில் தங்கள் அழுகையையும் வேதனையையும் வெளிப்படுத்த அவர்களுக்கு அங்கு யாருமே இருக்க மாட்டார்கள்.

தொடரும்.

– தமிழில்

**வேத. கிங்ஸிலிராஜா**

# 5 பிதாவைக்குறித்து இயேசு கொடுத்த சாட்சி

தேவனுடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவே அவரைக்குறித்து சாட்சி கொடுக்கிறார். இந்த இயேசுவானவர் பிதாவைக் குறித்து சாட்சி கொடுக்கவில்லை என்றால் தேவனைப் பற்றிய சத்தியம் உலகத்துக்குத் தெரியாமலேயே போயிருக்கும். ஏனென்றால் தேவனை ஒருவனும் ஒருக்காலும் கண்டதில்லை. பிதாவின் மடியிலிருக்கிற ஒரே பேறான குமாரனே அவரை வெளிப்படுத்தினார் (யோவா1:18). காணாத தேவனை மனுஷன் அறிந்து கொள்ள முடியாதபடியினாலே பிதாவின் மடியிலிருக்கிற குமாரனே அவரை வெளிப்படுத்துகிறார். மேலும் பிதா தவிர வேறொருவனும் குமாரனை அறியான், குமாரனும் குமாரன் எவனுக்கு அவரை வெளிப்படுத்த சித்தமாய் இருக்கிறாரோ அவனும் தவிர வேறொருவனும் பிதாவை அறியான் (மத்11:27). அதாவது பிதாவைக் குறித்து குமாரன் வெளிப்படுத்துகிறச் சத்தியத்தைக் கவனியாத எவனும் பிதாவைக் குறித்துவதற்கு இயேசுவானவருக்கு மட்டுமே தகுதி உண்டு என்பதற்கு இயேசுவானவரே சொல்லுகிற பதில் என்னவென்றால் தேவனிடத்தினின்று வந்தவரேத் தவிர வேறொருவரும் பிதாவைக் கண்டதில்லை இவரேப் பிதாவைக் கண்டவர் (யோவா6:46). தேவனிடத்திலிருந்து வந்த இயேசு மாத்திரமே பிதாவைக் கண்டபடியினால் பிதாவைக்குறித்து சாட்சிகொடுக்க இவரே தகுயானவராய் இருக்கிறார்.

மேலும் நான் அவரை அறிந்திருக்கிறேன் அவரை அறியேன் என்று சொல்வேனேயாகில் உங்களைப்போல நானும் பொய்யானயிருப்பேன் அவரை நான் அறிந்து அவருடைய வார்த்தையைக் கைக்கொண்டிருக்கிறேன் (யோவா8:55) என்று இயேசு சொல்லுகிறபடியினால் பிதாவைக் கண்டது மாத்திரமல்ல பிதாவை அறிந்தும் அவருடைய வார்த்தையைக் கைக்கொண்டிருக்கிறேன் (யோவா8:55) என்று இயேசு சொல்லுகிறபடியினால் பிதாவைக் கண்டது மாத்திரமல்ல பிதாவை அறிந்தும் அவருடைய வார்த்தையைக் கைக்கொண்டிருக்கிறவர் என்றும் தம்மை வெளிப்படுத்துகிறார். பிதாவை அறியவில்லை என்று இயேசு சொன்னால் தான் ஒரு பொய்யனாய் இருப்பேன் என்பதையும் சொல்லுகிறார். மேலும் நான் அவரால் வந்திருக்கிறபடியினாலும் அவர் என்னை அனுப்பி இருக்கிற படியினாலும் நானே அவரை அறிந்திருக்கிறேன் என்றார்.

(யோவா7:29) இயேசுவானவரே தேவனிடத்திலிருந்து வந்தபடியினாலும் இயேசுவானவரே பிதாவை அறிந்திருக்கிறவர். ஆகையால் இயேசுவானவர் பிதாவைக் கண்டவரும் அறிந்தவரும் அவருடைய வார்த்தையைக் கைக்கொண்ட வருமாய் இருக்கிறபடியால் பிதாவைக்குறித்து உலகத்துக்கு வெளிப்படுத்த இயேசுவானவருக்கு மட்டுமே தகுதியுண்டு என்பதை அறிந்து கொள்ளுகிறோம். எனவே இயேசுவானவர் தாம் பிதாவைக் கண்டதாகவும் பிதாவை அறிந்திருப்பதாகவும் பிதாவின் வார்த்தையை தாம் கைக்கொண்டிருப்பதாகவும் சொல்லியிருக்கும்போது பிதா என்பவர் இல்லை என்றும் இயேசுவானவரே பிதாவாக இருந்தார் என்றும் சொல்வோமானால் இயேசுவானவர் பிதாவைக் கண்டேன் என்று சொல்வதும் பிதாவை அறிந்திருக்கிறேன் என்று சொல்லுவதும் பொய்யான வார்த்தைகளாகிவிடும். மேலும் அப்படிச் சொல்லுகிறவர்கள் இயேசுவை ஒரு பொய்யர் என்றுச் சொல்லாமல் சொல்லுகிறார்கள். இப்பொழுது இயேசுவானவர் பிதாவைக் குறித்துக் கொடுத்த சாட்சிகளைக் கவனிப்போம்.

என் பிதா பரலோகத்திலிருக்கிறார் பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவன் எவனோ அவனே எனக்கு சகோதரனும் சகோதரியும் தாயுமாய் இருக்கிறான் என்றார். (மத்12:50) பரலோகத்தில் இருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோக ராஜ்யத்தில் பிரவேசிப்பானே அல்லாமல் என்னை நோக்கி கர்த்தாவே கர்த்தாவே என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை (மத்7:21). என் பிதா பரலோகத்திலிருக்கிறார் என்று இயேசுவானவர் சொல்லுகிறார். மேலும் பிதாவின் சித்தத்தை பூமியில் நிறைவேற்றுகிறவர்கள் தமக்கு சகோதரரும் சகோதரிகளும் தாயுமாயிருக்கிறார்கள் என்று சொல்லுகிறார். மேலும் பரலோகத்தில் நித்திய வாழ்வு உண்டென்று மனுஷருக்கு வாக்குத்தத்தம் பண்ணப்பட்டிருக்கிறபடியினாலும் அதில் பிரவேசிப்பதற்கான தேவனுடைய சித்தம் இயேசு கிறிஸ்து மூலமாய் வெளிப்பத்தப்பட்டிருக்கிறபடியினாலும் பரலோக வாழ்வைப் பெற்றுக்கொள்ள விரும்புகிறவர்கள் தேவனுடைய சித்தத்தின்படி செய்கிறவர்களாய் இருக்கவேண்ம் என்பதை இயேசு சொல்லுகிறார். தேவனுடைய சித்தத்தை செய்ய விரும்பாமல் தம்மை நோக்கி கூப்பிடுகிறவர்கள் பரலோகத்தில் பிரவேசிக்கமாட்டார்கள் என்பதையும் இயேசு சொல்லுகிறார். தேவனுடைய சித்தத்தை செய்ய விரும்பாமல் தம்மை நோக்கி கூப்பிகிறவர்கள் பரலோகத்தில்

பிரவேசிக்கமாட்டார்கள் என்பதையும் இயேசு உறுதியாச் சொல்லுகிறார். ஆகையால் இயேசுவை நோக்கி ஜெபிக்கிறவர்கள் பரலோகத்தில் பிரவேசிக்கமாட்டார்கள் என்பதற்கு அவர்களுடைய ஜெபங்களே அவர்களுக்கு சாட்சிகளாய் இருக்கின்றன.

என் பிதா என்னிலும் பெரியவராயிருக்கிறார் (யோவா. 14:28)

என் பிதா எல்லாரிலும் பெரியவராயிருக்கிறார் (யோவா. 10:29)

நான் பிதாவினால் பிழைத்திருக்கிறேன் (யோவா 6:57)

குமாரனும் தம்மில்தாமே ஜீவனுடையவராய் இருக்கும்படி அருள் செய்திருக்கிறார் (யோவா 5:26)

பிதாவுக்குப் பிரியமானதை நான் எப்பொழுதும் செய்கிறேன்

நான் பிதாவினிடத்திலிருந்து புறப்பட்டு உலகத்திலே வந்தேன் மறுபடியும் உலகத்தைவிட்டு பிதாவினிடத்திற்குப் போகிறேன் என்றார் (யோவா 16:28)

என் சித்தத்தின்படியல்ல என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்யவே நான் வானத்திலிருந்து இறங்கி வந்தேன் (யோவா 8:42)

நான் சுயமாய் வரவில்லை அவரே என்னை அனுப்பினார் (யோவா8:42)

என் பிதா எனக்குப் போதித்தார் (யோவா8:28)

என் பிதா எனக்குக் கற்றுக்கொடுத்தார் (யோவா5:36)

ஆகையால் நான் பேசுகிறவைகளைப் பிதா என்க்குச் சொன்னபடியேப் பேசுகிறேன் என்றார் (யோவா12:50)

நான் அவரிடத்தில் கேட்டவைகளையே உலகத்துக்குச் சொல்லுகிறேன் (யோவா 8:26)

தேவனிடத்தில் கேட்டிருக்கிற சத்தியத்தை உங்களுக்குச் சொன்ன மனுஷனாகிய என்னை (யோவா 8:40)

நான் உங்களுடனேச் சொல்லுகிற வசனங்களை என் சுயமாய்ச் சொல்லவில்லை என்னிடத்தில் வாசமாயிருக்கிற பிதாவானவரே இந்தக் கிரியைகளைச் செய்துவருகிறார் (யோவா14:16)

நீங்கள் கேட்கிற வசனம் என்னுடையதாயிராமல் என்னை அனுப்பின பிதாவினுடைய தாயிருக்கிறது (யோவா 14:25)

தொடரும்

**– சகோ. ஆசீர்வாதம் (போதகர்)**
திருவெற்றியூர்

# பிசாசை எவ்வாறு கட்டுப்படுத்துவது?

**கிறிஸ்தவர்களின் எதிரி பிசாசு**

**I பேதுரு 5:7-9:** அவர் உங்களை விசாரிக்கிறவரானபடியால், உங்கள் **கவலைகளையெல்லாம் அவர்மேல் வைத்துவிடுங்கள். 8 தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள், விழித்திருங்கள்.** ஏனெனில், உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம்போல் எவனை விழுங்கலாமோ என்று வகைதேடிச் சுற்றித்திரிகிறான். விசுவாசத்தில் உறுதியாயிருந்து, **அவனுக்கு எதிர்த்து நில்லுங்கள்.** உலகத்திலுள்ள உங்கள் சகோதரரிடத்திலே அப்படிப்பட்ட பாடுகள் நிறைவேறிவருகிறதென்று அறிந்திருக்கிறீர்களே.

மேலே உள்ள வசனப்பகுதி நாம் பிசாசை எவ்வாறு கட்டுப்படுத்த முடியும் என்பதற்கு 4 ஆலோசனைகளை கொடுக்கின்றது. அவை

**1. உங்கள் கவலைகளை எல்லாம் ஆண்டவர் மீது வைத்துவிடுங்கள்:**

**சங் 55:22** - கர்த்தர்மேல் உன் பாரதத்தை வைத்துவிடு, அவர் உன்னை ஆதரிப்பார், நீதிமானை ஒருபோதும் தள்ளாடவொட்டா

**எபே 6:10** - கடைசியாக, என் சகோதரரே, கர்த்தரிலும் அவருடைய சத்துவத்தின் வல்லமையிலும் பலப்படுங்கள்.

**பிலி 4:13** - என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ்செய்ழி எனக்கு பெலனுண்டு.

**மத் 11:28** - வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே ! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள், நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன். நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன், என் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக்கொண்டு, என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள், அப்பொழுது, உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும்.

நம் கவலைகளை கர்த்தர் மீது வைக்கும்படி அவரே அழைக்கின்றார்.

**2) தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள் :**

**I தெச 5:6,8** - ஆகையால், மற்றவர்கள் தூங்குகிறதுபோல நாம் தூங்காமல், விழித்துக்கொண்டு தெளிந்தவர்களாயிருக்கக்கடவோம். பகலுக்குரியவர்களாகிய நாமோ தெளிந்தவர்களாயிருந்து, விசுவாசம் அன்பு என்னும் மார்க்கவசத்தையும், இரட்சிப்பின் நம்பிக்கையென்னும்

தலைச்சீராவையும் தரித்துக்கொண்டிருக்கக்கடவோம்.

**தீத்து 2:2,4,5,12-2** முதிர்வயதுள்ள புருஷர்கள் ஜாக்கிரதையுள்ளவர்களும், நல்லொழுக்கமுள்ளவர்களும் **தெளிந்த புத்தியுள்ளவர்களும்**, விசுவாசத்திலும் அன்பிலும் பொறுமையிலும் ஆரோக்கியமுள்ளவர்களுமாயிருக்கும்படி புத்திசொல்லு. தேவவசனம் தூஷிக்கப்படாதபடிக்குப் பாலிய ஸ்திரீகள் தங்கள் புருஷரிடத்திலும், தங்கள் பிள்ளைகளிடத்திலும் அன்புள்ளவர்களும், தெளிந்த புத்தியுள்ளவர்களும், கற்புள்ளவர்களும், வீட்டில் தரித்திருக்கிறவர்களும், நல்லவர்களும், தங்கள் புருஷருக்குக் கீழ்படிகிறவர்களுமாயிருக்கும்படி, அவர்களுக்குப் படிப்பிக்கத்தக்க நற்காரியங்களைப் போதிக்கிறவர்களுமாயிருக்கவும் முதிர்வயதுள்ள ஸ்திரீகளுக்குப் புத்திசொல்லு. நாம் அவபக்தியையும் லௌகிக இச்சைகளையும் வெறுத்து, தெளிந்தபுத்தியும் நீதியும் தேவபக்தியும் உள்ளவர்களாய் ஜீவனம்பண்ணி,

**1 பேதுரு 1:13** – ஆகையால், நீங்கள் உங்கள் மனதின் அரையைக் கட்டிக்கொண்டு, **தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருந்து**. இயேசுகிறிஸ்து வெளிப்படும்போது உங்களுக்கு அளிக்கப்படும் கிருபையின்மேல் பூரண நம்பிக்கையுள்ளவர்களாயிருங்கள்.

**3) விழித்திருங்கள் :**

கொலே 4:2 – இடைவிடாமல் ஜெபம்பண்ணுங்கள், ஸ்தோத்திரத்துடன் ஜெபத்தில் **விழித்திருங்கள்.**

1 கொரி 16:13 – **விழித்திருங்கள்**, விசுவாசத்திலே நிலைத்திருங்கள், புருஷராயிருங்கள், திடன்கொள்ளுங்கள்.

1 தெச 5 : 6 – ஆகையால், மற்றவர்கள் தூங்குகிறது போல நாம் தூங்காமல், **விழித்துக்கொண்டு** தெளிந்தவர்களாயிருக்கக்கடவோம்.

**4) பிசாசிற்கு எதிர்த்து நில்லுங்கள் :**

யாக் 4:7 – ஆகையால், தேவனுக்குக் கீழ்ப்படிந்திருங்கள். **பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள்**, அப்பொழுது அவன் உங்களைவிட்டு ஓடிப்போவான்.

எபே 4:27 – பிசாசுக்கு இடங்கொடாமலும் இருங்கள்.

எபே 6:11 – நீங்கள் **பிசாசின் தந்திரங்களோடு எதிர்த்து நிற்கத்** திராணியுள்ளவர்களாகும்படி, தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தையும் தரித்துக்கொள்ளுங்கள்.

எதிரியான பிசாசு நம் பின்னே இருக்கிறான். அவன் நம்மை அழிக்க நினைக்கிறான். அதை முறியடிக்க நாம் என்ன செய்ய வேண்டும்.

**– கிங்ஸிலிராஜா**

# 1 முதல் சபை

வசன பகுதி : அப் 2:1-47

**சம்பவ சுருக்கம் :**

அப்போஸ்தலர்கள் பனிரெண்டு பேரும் ஆண்டவர் இயேசு கட்டளையிட்டபடியே, எருசலேமில் காத்திருந்தனர். ஆண்டவர் பரமேறி சென்ற 10வது நாள், அதாவது ஆண்டவர் உயிர்தெழுந்த 50வது நாள், யூதர்கள் கொண்டாடுகிற வாரங்களின் பண்டிகையின் நிறைவு நாளாகிய 50வது நாள் அவர்களெல்லாரும் ஒருமனப்பட்டு ஓரிடத்தில் கூடிவந்தார்கள். அந்த நாளை பெந்தகோஸ்தே நாள் என்றும் அழைப்பார்கள். எருசலேமே பண்டிகையினால் விழாக்கோண்ட போது, அப்போஸ்தலர்கள் மேல் பரிசுத்த ஆவியானவர் இறங்கினார். அவர்கள் பரிசுத்த ஆவியனாவரால் நிரப்பபட்டு, ஆவியானவர் தங்களுக்கு தந்த வரத்தின்படியே வெவ்வேறு மொழிகளில் பேசத்தொடங்கினார்கள். பண்டிகைக்காக 17 தேசங்களிலிருந்து வந்த யூதர்களும், யூதமார்க்கத்தை சார்ந்தவர்களும் தங்கள் தாய்மொழியில் அப்போஸ்தலர்கள் தேவனுடைய மகத்துவங்களை பேசக்கேட்டனர். அப்பொழுது, பேதுரு பதினோரு அப்போஸ்தலருடனே எழுந்து நின்று அவர்களுக்கு கிறிஸ்துவின் பாடு, மரணம், அடக்கம், உயிர்த்தெழுதலாகிய சுவிசேஷத்தை அவர்களுக்கு பிரசங்கித்தார். அதை கேட்டவர்கள் தங்கள் இருதயத்தில் குத்தப்பட்டவர்களாகி, நாங்கள் என்ன செய்ய வேண்டும் என்று கேட்டார்கள். பேதுரு அவர்களிடம் இயேசுகிறிஸ்துவின் அதிகாரத்தின்படி மனம்திரும்பி, பாவம் மன்னிக்கப்பட ஞானஸ்நானம் பெறுங்கள் என்றார். அன்றைய தினம் ஏறக்குறைய 3000 பேர் திருமுழுக்கு (ஞானஸ்நானம்) பெற்றனர். அவர்கள் சபையாக கூடி அப்போஸ்தலருடனே வாரத்தின் முதல்நாளாகிய அன்றைய தினமே ஜெபம் செய்து, காணிக்கை கொடுத்து, கர்த்தர் பந்தியில் பங்குபெற்று, தேவ வார்த்தை கேட்டு, தேவனைத் துதித்து அவரை தொழுதுக் கொண்டார்கள்.



டியர் குட்டீஸ் ! பரிசுத்த ஆவியானவர் அப்போஸ்தலர் மேல் இறங்கி, அவர்களை நிரப்பினார். அப்போஸ்தலர்கள் பேசின அந்நிய பாஷை (அற்றிய மொழி) என்பது அனைவரும் புரிந்துக்கொள்ள முடிந்தது. புரியாத ஒன்றை அவர்கள் பேசவில்லை. மேலும், ஜனங்கள் பாவம் மன்னிக்கப்பட மனம்திரும்பி திருமுழுக்கு பெறுங்கள் என்றே சொல்லப்பட்டது. மாறாக மனம் வருந்தி ஜெபம் பண்ணுங்கள் என்று சொல்லப்படவில்லை. ஏனெனிலல் பாவம் மன்னிக்கப்பட தேவசித்தமே திரு முழுக்குதான். ஆகையால், குட்டீஸ்! நாமும் தேவசித்தம் செய்து, தேவ கிருபை பெறுவோம்.

**மனன வசனம்** :- அப் 2:38

''நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவ மன்னிப்புக்கென்று இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தை பெறுவீர்கள்."

# 2 சப்பாணி சுகமடைதல்

வசனபகுதி : அப் 3:1 – 4:4

**சம்பவ சுருக்கம் :**

ஒன்பதாம் மணியாகிய ஜெப நேரத்தில் ஜெபம் செய்யும்படி பேதுருவும், யோவானும் தேவாலயத்துக்கு போனார்கள், அங்கே தன் தாயின் வயிற்றில் பிறந்தது முதல் சப்பாணியாக இருந்த ஒருவன் அலங்கார வாசலில் அமர்ந்து நாள்தோறும் ஆலயத்துக்கு வருபவர்களிடம் பிச்சைக் கேட்டுக் கொண்டு இருப்பான். அன்றைய தினமும் அவன் தேவாலயத்திற்கு சென்ற பேதுருவிடமும் யோவானிடமும் பிச்சைக் கேட்டான். அவர்கள் எங்களை பார் என்றார்கள். அவன் ஏதாகிலும் கிடைக்கும் என்று அவர்களை பார்த்தான். பேதுருவோ, பொன்னும், பொருளும் என்னிடத்தில் இல்லை, என்னிடத்தில் உள்ளதை உனக்குத் தருகிறேன். இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே எழுந்து நட என சொல்லி, வலது கையை பிடித்து தூக்கி விட்டான். உடனே சப்பாணி பெலனடைந்து எழுந்து நின்று, தேவனை துதித்துக் கொண்டு அவர்களுடனே தேவாலயத்துக்கு போனான். தினமும் அவன் பிச்சை எடுப்பதை பார்த்த ஜனங்கள் அவன் நடப்பதையும், குதிப்பதையும், தேவனை துதிப்பதையும் கண்டு ஆச்சரியப்பட்டு, பிரமித்து சாலமோன் மண்டபத்திலே பேதுருவிடமும் யோவானிடம் வந்தார்கள். பேதுருவோ ஜனங்களை நோக்கி, இது நாங்கள் எங்கள் சுயசக்தியால் செய்யவில்லை. இவன் இயேசு கிறிஸ்துவினாலே எழுந்து நடக்கிறான் என்றார். மேலும், அவர்களுக்கு சுவிஷேமாகிய இயேசுகிறிஸ்துவின் பாடு, மரணம், அடக்கம் உயிர்த்தெழுதலை பிரசங்கம் செய்தார். அவர்கள் வசனத்தை கேட்டவர்களில் ஏறக்குறைய 5000 பேர் விசுவாசிகளானார்கள்.



டியர்குட்டீஸ் ! பேதுருவும், யோவானும் அந்த சப்பாணியை சுமாக்கினதை பார்த்தீர்களா ! சப்பாணிக்கு தான் அவர்களால் குணமாவேன் என்ற விசுவாசமும் இல்லை, அவன் அதை எதிர்பார்க்கவுமில்லை. அவன் அவர்களிடம் பணத்தைதான் பிச்சையாக எதிர்பார்த்தான். பேதுருவும், யோவானும் தங்களது

விசுவாசத்தின்படியே, ஆண்டவருடைய வல்லமையால் அவனை சுகமாக்கினார்கள். ஜனங்கள் அவர்களை பெருமையாக நினைத்து பிரமித்த போது இது ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் வல்லமை என்ற அறிக்கையிட்டு தேவனையே மகிமைப்படுத்தினார்கள். மேலும் அற்புதம் செய்வதை அவர்கள் நோக்கமாக கொள்ளாமல் சுவிசேஷத்தை பிரசங்கிப்பதையே நோக்கமாக கொண்டனர். ஒருவனுக்கு சரீர சுகமளித்ததை மையமாக கொண்டு 5000 பேருக்கு இயேசுவின் அதிகாரத்தின்படி ஆத்தும சுகத்தை திருமுழுக்கினால், பாவமன்னிப்பை கொடுத்தனர். நாமும் பேதுருவையும் யோவானையும் போல ஆத்துமாக்களை குறித்தே அக்கறையுடன் இருக்க வேண்டும்.

**மனனவசனம்** : நீதி 11:30

நீதிமானுடைய பலன் ஜீவவிருட்சம் ; ஆத்துமாக்களை ஆதாயப்படுத்திக்கொள்கிறவன் ஞானமுள்ளவன்.

பாடம் **3**

# தேவனுக்கு செவிகொடுங்கள்

வசனபகுதி அப்4:1–37

**சம்பவசுருக்கம்**:–

பேதுருவின் பிரசங்கத்தை கேட்டபின்பு 5000 பேர் விசுவாசிகளானார். ஆனால், பேதுருவையும் யோவனையும் ஆசாரியர்களும், தேவாலயத்து சேனைத் தலைவனும், சதுசேயரும் சினங்கொண்டு, அவர்களை பிடித்து சிறையில் அடைத்தனர். மறுநாளில் பிராதான ஆசாரியனாகிய அன்னாவும், காய்பாவும், அலெக்சாந்தரும், பிரதான ஆசாரியனுடைய வீட்டார் யாவரும் கூடி பேதுருவையும் யோவனையும் நடுவே நிறுத்தி, எந்த வல்லமையினால், எந்த அதிகாரத்தினால் இதை செய்கிறீர்கள் என்று கேட்டார்கள். பேதுருவோ, இயேசுகிறிஸ்துவின் வல்லமையினாலும், அதிகாரத்தின்படியும் இவைகளை செய்கிறோம். இயேசுகிறிஸ்து இன்றி இரட்சிப்பு இல்லை.



வானத்தின் கீழேங்கும் மனுஷர்களுக்குள்ள இரட்சிக்கபடும்பட இயேசுவின் நாமமே கட்டளையிடப்பட்டது என்றார்கள். ஆசாரியரும் மற்ற யாவரும் படிப்பறிவற்ற அவர்கள் பேசுவதை கேட்டு ஆச்சரியப்பட்டனர். அவர்கள் செய்த அற்புதம் பகிரங்கமாக எல்லாருக்கும் தெரிந்தபடியினால், பேதுருவையும், யோவனையும் அழைத்து இயேசுவைக் குறித்து பிரசங்கம் செய்யக்கூடாது என்றார்கள். பேதுருவும் யோவனும், தேவனுக்குச் செவிகொடுக்கிறதை பார்க்கிலும், உங்களுக்கு செவிகொடுக்கிறது நியாயமோ என்று நிதானித்து பாருங்கள். நாங்கள் இயேசுவை குறித்து பிரசங்கிப்போம் என்றார்கள். பிறகு அவர்கள் பேதுருவையும் யோவானையும் விடுதலை செய்தார்கள். அவர்கள். சுகமாக்கின சப்பாணி 40 வயதிற்கு மேற்பட்டவனாக இருந்தான். விடுதலையான பின்பு பேதுருவும், யோவனும் மற்ற அப்போஸ்தலர் மற்றும் சபையாருடன் சேர்ந்து ஒருமனபட்டு ஜெபம் செய்தார்கள். அவர்கள் கெபித்தபோது அவர்கள் கூடியிருந்த இடம் அசைந்தது. விசுவாசிகள் யாவரும் தங்கள் சொத்துக்களை விற்று தேவனுக்கு காணிக்கை கொடுத்தார்கள். சீப்புரு தீவை சேர்ந்த லேவியானாகிய பர்னபா என்ற யோசே என்பவனும். தன்னுடைய நிலத்தை விற்று காணிக்கை கொடுத்தான். இவன் அப்போஸ்தலரால் ஆறுதலின் மகன் என்று அழைக்கப்பட்டான்.

டியர் குட்டீஸ்! என்ன தடை வந்தாலும், எத்தனை தடை வந்தாலும் நாம் இயேசுவை குறித்து அறிவித்துக் கொண்டே இருக்க வேண்டும். அது ஒரு போதும் தடைபடவே கூடாது. அதற்காக நாம் நம்முடைய ஆஸ்தி, ஜீவன் எதையும் இழக்களாம். அப்படியே செய்வோம்! தேவன் நமக்கு நிச்சியம் கிருபைசெய்வார்.

**மனைவசனம்** :–

அப்4:19,20 ‘‘ தேவனுக்கு செவிகொடுக்கிறதை பார்க்கிலும் உங்களுக்கு செவிகொடுக்கிறது தேவனுக்கு முன்பாக நியாயமாயிருக்குமோ என்று நீங்களே நிதானித்து பாருங்கள். நாங்கள் கண்டவைகளையும் கேட்டவைகளையும் பேசாமலிருக்கக்கூடாதே”

**மீரா பென், சரளா பென்**

– பெண் அடிமைத்தனத்திற்கு எதிராக போராடியவர்கள்

# 4 அனனியா, சப்பிராள்

வசன பகுதி : அப் 5:1 –11

**சம்பவ சுருக்கம்** :–

சபையார் தங்களுடைய நிலங்களை விற்று காணிக்கை கொடுக்கிறதை பார்த்த அனனியாவும், அவனுடைய மனைவியாகிய சப்பிராளும் தங்களுடைய நிலத்தை விற்றனர். அதில் ஒரு பங்கை, தன் மனைவி அறிய தங்களுக்கென்று எடுத்து வைத்துவிட்டு, மீதத்தை கொண்டு வந்து அனனியா அப்போஸ்தலரிடம் இவ்வளவுக்கு தான் விற்றோம் என கொடுத்தான். பேதுருவோ, அனனியா அது உன் சொத்து, நீ விற்று தேவனுக்கு கொடுக்கிறாய். அப்படியிருக்க ஒரு பங்கை வஞ்சித்து வைத்துவிட்டு பரிசுத்த ஆவியினிடத்தில் பொய் சொல்லும்படி சாத்தான் உன் மனதை நிரப்பினது என்ன? நீ மனுசரிடத்தில் அல்ல தேவனிடத்தில் பொய் சொன்னாய் என்றார். அனனியா இந்த வார்த்தையை கேட்டவுடனே, கீழே விழுந்து தன் ஜீவனை விட்டான். வாலிபர் அவனை சேலையில் சுற்றி வெளியேக் கொண்டு போய் அடக்கம் பண்ணினார்கள்.



ஏறக்குறைய மூன்று மணி நேரத்திற்கு பிறகு, நடந்ததை அறியாமல் அனனியாவின் மனைவி சப்பிராள் உள்ளே வந்தாள். பேதுரு அவளிடம் நிலத்தை இவ்வளவிற்கு தானா விற்றீர்கள் என்று கேட்டார். அவள் ஆம் ! இவ்வளவுக்குத்தான் விற்றோம் என்றாள். கர்த்தருடைய ஆவியைச் சோதிக்க நீங்கள் ஒருமனப்பட்டதென்ன? உன் கணவனை அடக்கம் செய்தவர்கள் உன்னையும் அடக்கம்பண்ணுவார்கள் என்றார். உடனே அவளும் பேதுருவினுடைய பாதத்தில் விழுந்து தன் ஜீவனைவிட்டாள். வாலிபர் வந்து அவள் மரித்துப் போனதைக் கண்டு, அவள் கணவனை அடக்கம் பண்ணிய இடமருகிலேயே அவளையும் அடக்க செய்தனர். இதை கேள்விப்பட்ட சபையாருக்கும், மற்ற யாவருக்கும் மிகுந்த பயமுண்டாயிற்று.

**டியர் குட்டீஸ் !**

தேவனுடைய காரியத்தில் பொய் பேசின அனனியாவிற்கும், அவனுடைய மனைவி சப்பிராளுக்கும் நேரிட்டதை பார்த்தீர்களா ! லாபத்தை போல இருந்தது ;

ஆனால், அவர்கள் ஜீவனையே பறித்துவிட்டது. தேவனுக்கு கொடுக்கிற விஷயத்தில் வஞ்சனை கூடாது. அது பாவம், மனதின் தீர்மானித்தபடி கர்த்தர் நமக்கு தந்தருளிதின் படியே உற்சாகமாய் கொடுக்க வேண்டும். அப்படியே செய்வோம் ! தேவ பாதுகாப்பை பெறுவோம் ! ஆமென்.

**மனனவசனம்** :–

மல்கியா 3:8 ‘‘மனுசன் தேவனை வஞ்சிக்கலாமா? நீங்களோ என்னை வஞ்சிக்கிறீர்கள். எதிலே உம்மை வஞ்சித்தோம் என்கிறீர்கள் ? தசம பாகத்திலும் காணிக்கைகளிலுந்தானே.”



## இம்மாதக் கேள்விகள்

1. யாருடைய இரத்தம் சகல பாவங்களையும் நீக்கும்?
2. மாம்சத்தின் உயிர் எதில் இருக்கிறது?
3. தேவன் நோவாவிடம் மாம்சத்தை எதினோடே புசிக்கக்கூடாது என்றார்?
4. இரத்தம் சிந்துதல் இல்லாமல் என்ன இல்லை?
5. நமது பாவங்களை நிவர்த்தி செய்கிற கிருபாதார பலி யார்?
6. எப்பொழுதெல்லாம் கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தை தெரிவிக்கிறோம்?
7. யாருடைய இரத்தம் மேன்மையானதை பேசுகிறது?
8. தேவனுக்கேற்ற துக்கம் எதை உண்டாக்குகிறது?
9. ஏன் கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார்?
10. எது நம்மையும் இயேசுகிறிஸ்துவின் உயிர்த்தெழுதலினால் இரட்சிக்கிறது?

**பதில்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் 30-3-13**

## சிறுவர்க்கான கேள்விகள்



1. 50வது நாளை எவ்வாறு அழைப்பார்கள்?
2. அப்போஸ்தலர்கள் பேசின அந்நிய மொழியை எத்தனை தேசத்தார் கேட்டனர்?
3. அப்போஸ்தலர்கள் பேசின அந்நிய மொழியை அவர்கள் எப்படி புரிந்துக்கொண்டனர்?
4. பாவமன்னிப்பு பெற ஒருவர் என்ன செய்ய வேண்டும்?
5. சப்பாணி யாருடைய விசுவாசத்தால் சுகமடைந்தான்?
6. நாம் எவ்வளவு தடை வந்தாலும் என்ன செய்ய வேண்டும்?
7. பொய் சொன்ன அனனியா, சப்பிராள் என்ன ஆனார்கள்?



**பதில்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் 30-3-13**

அனுப்ப வேண்டிய முகவரி :

**சகோதரி. பேபி ராஜா**

45C/1, சர்ச் லேன், காரனேசன் தெரு, அரசரடி

மதுரை - 625 016 செல்: 92 4421 4421

## சென்ற மாத பதில்கள்

| | |
|---|---|
| 1. லூக் 1 : 29, | 6. 1யோவா 2 : 22 |
| 2. யோவா 16 : 13 | 7. யோபு 1 : 7 |
| 3. லூக் 24 : 49 | 8. அப் 5 : 22 |
| 4. அப் 2 : 38 | 9.1கொரி 15 : 8 |
| 5. யோபு 1 : 1 | 10. எபி 10 : 24-25 |

## பிப்ரவரி மாதம் சிறுவர் பகுதி பதில் எழுதியவர்கள்

1. P. சாம் – மதுரை
2. B. கௌசந்த் – திருப்பூர்
3. P. ஜெபக்கனி – மதுரை
4. P. சௌந்தர் பாண்டி – திருமங்கலம்
5. V. ஷைனி – மதுரை
6. V. ஷாலி – மதுரை
7. I. ஷீபா பிரியதர்ஷினி – சிவகங்கை
8. Y. ஜெயசுதா பொன்செல்வி – சென்னை

## பிப்ரவரி மாதம் பதில் எழுதியவர்கள்

1) Mrs. லில்லி ஆல்பர்ட் – நெல்லை
2) Mrs. காந்தா மனோகரன் – திருச்சி
3) Mrs. அன்பு சுதந்திரம் – ஏர்வாடி
4) Mrs. மேரி ராஜ் – மதுரை
5) J. விஜய் – வளர்நகர்
6) Mrs. ஏஞ்சலம்மாள் – வளர்நகர்
7) Mrs. ஜாஸ்மின் வின்செண்ட் – மதுரை
8) Mrs. ஜெமி நல்லையா – மதுரை
9) Mrs. ரேச்சல் தமிழரசி – மதுரை
10) Mrs. தெல்மா ஸ்டான்லி – மதுரை
11) G. புஷ்பா ஜேம்ஸ் – விருதுநகர்
12) Mrs. கஸ்தூரி கலாவதி – மதுரை
13) N. ஜான் செல்லையா – மதுரை
14) Mrs. மல்லிகா ஜெபமணி – துத்துக்குடி
15) Mrs. ஹெப்ஸி தாமஸ் – படப்பை
16) Mrs. மெர்ஸி ரூபஸ் – சேலம்
17) Mrs. தவமணி தேவி – திருப்பூர்
18) Mrs. கேற்றி செல்லத்துரை – மே. தாம்பரம்
19) Mrs. பிரேமலதா சுந்தர்பாபு – செங்கல்பட்டு
20) Mrs. குணசீலி சுந்தரி – கோவை
21) Sis. லிசிராஜசேகரி– மறைமலைநகர்
22) S. சூசைமரியன் – சென்னை
23) Mrs. கேத்ரின் அருள்நேசம் – மதுரை
24) Mrs. லாரா ரத்னராஜ் – கோவை
25) Mrs. குணசுந்தரி நாகராஜன்– கீழப்பாவூர்
26) Mrs. சுகந்தி ஜோன்ஸ் – திருச்சி
27) Mrs. வசந்தி வெஸ்லி – தென்காசி
28) Mrs. டெய்ஸி தர்மராஜ் – புதுக்கோட்டை
29) Mrs. மெர்ஸி வில்சன் – செட்டிப்பாளையம்
30) Mr. இரா.ஏத்திராசன் – சங்கரி
31) T. ஹெலன் இந்திராபாய் – மதுரை
32) A. ஆனிவிக்டோரியா – கொளத்துர்
33) R. சரோஜா – தென்கலம்
34) V. மெர்சி – செட்டிப்பாளையம்
35) R. விஜிபிரியங்கா – செட்டிப்பாளையம்
36) M. ராணி – செட்டிப்பாளையம்
37) A. ஏசுநேசன் – பாண்டிச்சேரி
38) Mrs. ஜெயசுதா தேவசகாயம் –சென்னை
39) P. சூரியா பிரியா – திருமங்கலம்
40) G. பீற்றர் பால்ராஜ் – ஆறுமுகநேரி
41) Mrs. இந்திர மங்களராஜ் – வடவள்ளி
42) M. புஸ்பராணி – நாமக்கல்
43) B. ஸ்டெல்லா பவுனம்பாள்– மணச்சநல்லுர்
44) Mrs. சிந்தனைமலர் ரவீந்தர்– ஆம்பூர்
45) I. அலெக்சாண்டர் சாலமோன்– சிவகங்கை
46) M. வசந்தா கெனசரேத் – ஆம்பூர்
47) C . ரேச்சல் ஜீவகாந்தி – சேலம்
48) P . இந்திராபாண்டி – திருமங்கலம்

**தொடர்ந்து இப்பகுதியில் பங்குபெறும் அனைவருக்கும் வாழ்த்துக்கள் !**